வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 27.06.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 200 | பக்கங்கள் : 16



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

## அரசின் அபிவிருத்தி குறித்து நானேதான் பேசும் நிலைமை

### ஜனாதிபதி ரணில் கவலை

கொழும்பு, ஜூன் 27

அரசாங்கத்தின் அபிவிருத்திகள் தொடர்பில் நான்தான் பேச வேண்டியுள்ளது. பொருளாதாரப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றி இரண்டு இராஜாங்க அமைச்சர்களை தவிர அரசாங்கத்தில் உள்ள வேறு எவரும் பேசுவதில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடும் கவலை தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் பலரை அழைத்து அண்மையில் இதுபற்றி ஜனாதிபதி

15

## ராஜபக்‌ஷக்களை கூண்டோடு மக்கள் முன் தூக்கிலிட வேண்டும்

### சரத் பொன்சேகா எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 27

”இலங்கையை அழித்து நாசமாக்கியது ராஜபக்‌ஷக்களே. அவர்களை கூண்டோடு மக்கள் முன்னிலையில் தூக்கிலிட வேண்டும்.” - இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

”தனி நாடு கோரி போரிட்ட விடுதலைப் புலிகளை அழித்த பெருமை இராணுவத்தினரையே சாரும். இறுதிப் போருக்கு தலைமை தாங்கியவன் என்ற ரீதியிலும், முன்னாள்

15

# சி. ஐ. ஏயின் இயக்குநர் இலங்கைக்கு வந்தார்!

## அமெரிக்கா வெளிப்படுத்தியதாக உலக தமிழர் பேரவை சுரேன் தகவல்

- இலங்கை பொறுப்பு கூறலிலிருந்து தப்ப முடியாது



நியூயோர்க், ஜூன் 27

**அமெரிக்காவின் மத்திய உளவு முகமையின் (சி. ஐ. ஏ) பிரதம இயக்குநர் வில்லியம் ஜே. பேர்ன்ஸ் இலங்கை வந்திருந்தார் என்பதை அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு பேரவை தம்மிடம் தெரிவித்ததாக உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேந்திரன் சுரேன் தெரிவித்துள்ளார்.**

அத்துடன், பொறுப்புக் கூறலில் இருந்து இலங்கை தப்பிக்க முடியாது. இதற்காக எதிர்வரும் செப்ரெம்பரில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எந்த நாடுகளின் ஆதரவு கிடைக்காது விட்டாலும் அமெரிக்கா பிரேரணை ஒன்றைக் கொண்டுவரும் என்றும் உறுதியளிக்கப்பட்டது என்றும் கூறப்பட்டது.

அண்மையில், அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு அமைச்சின் உயர் குழுவை வாஷிங்டனில் உலகத் தமிழர் பேரவை சந்தித்துப் பேசியபோதே இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டன என்று வானொலி ஒன்றுக்கு சுரேன் அளித்த நேர்காணலில் தெரிவிக்கப்பட்டது.

அந்த நேர்காணலில் அவர் மேலும் கூறிய முக்கிய அம்சங்கள் வருமாறு,

“அமெரிக்க தேசிய பாதுகாப்பு

15

## அரச பயங்கரவாதமே கடன் மறுசீரமைப்பு!

### உதய கம்மன்பில் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 27

அரசாங்கம் தேசிய கடன் மறுசீரமைப்பு செய்வதாக இருந்தால் பாராளுமன்றம் மற்றும் கடன் உரிமையாளர்களுடன் கலந்துரையாடியே மேற்கொள்ள முடியும். அவ்வாறு இல்லாமல் தன்னிச்சையாக செயல்படுமாக இருந்தால் அதனை அரச பயங்கரவாத செயலாகவே நாங்கள் காண்கிறோம் என்று பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

15

## நலன்புரி திட்டத்தில் முறைகேடு வடக்கிலும் மக்கள் போராட்டம்!

### ஏ-9 உள்ளிட்ட வீதிகள் மறிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27

அரசாங்கத்தின் நலன்புரி கொடுப்பனவான அஸ்வெசும திட்டத்தில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டதாக தெரிவித்து வடக்கிலும் நேற்று மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

வவுனியாவில் மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலகம் முன்பாக போராட்டங்கள் இடம்பெற்றன.

வவுனியா பிரதேச செயலகம்

15



## யாழ்ப்பாணம் வருகிறார் மைத்திரிபால!

யாழ்ப்பாணம், ஜூன் 27

முன்னாள் ஜனாதிபதியும் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன நாளை புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

யாழ்ப்பாணம் வரும் அவர் மூன்று நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார். இதன்போது பல்வேறு அரசியல் மற்றும் தனிப்பட்ட நிகழ்வுகள் - சந்திப்புகளில் அவர் ஈடுபடுவார் என்றும் தெரிய வருகின்றது.

## உண்மை, நல்லிணக்க குழுமூலம் நீண்ட சமாதானம் ஏற்படுத்தப்படும்

### இந்தியாவில் நீதியமைச்சர் தெரிவிப்பு

சென்னை, ஜூன் 27

அனைத்து சமூகங்களின் ஒருமித்த கருத்துடன் நீண்ட கால சமாதானத்தை நாட்டில் ஏற்படுத்த அரசாங்கம் விரைவில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைக்கும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்‌ஷ இந்தியாவில் தெரிவித்துள்ளார்.

இந்தியா சென்றுள்ள நீதி அமைச்சர் அங்குள்ள ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

“புலம்பெயர் தமிழர்கள் மற்றும்

15

## காணிகளை விடுவிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம்!

கொழும்பு, ஜூன் 27

1985ஆம் ஆண்டுக்கு பின்னர் வனவள பாதுகாப்பு திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவை பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக வர்த்தமானி ஊடாக அறிவிக்கப்பட்ட காணிகளை விடுவிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைய 1985 ஆம் ஆண்டுக்கு பின்னர் இரு திணைக்களங்களும் அடையாளப்படுத்திய காணிகளை விடுவிப்பதற்கு அமைச்சர் பவித்ரா

15



## பாதுகாப்பு உடன்படிக்கை எதுவும் சீனாவுடன் கிடையாது!

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஜூன் 27

சீனாவுடன் இலங்கை எந்தவொரு பாதுகாப்பு உடன்படிக்கையையும் செய்துகொள்ளவில்லை. எதிர்காலத்திலும் எந்த ஒரு பாதுகாப்பு உடன்படிக்கையையும் செய்துகொள்ளாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் நாட்டின் பிரபல இணையமான பிரான்ஸ் 24 தளத்துக்கு ஜனாதிபதி அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் சீனாவின் பிரசன்னம்

15

# அஸ்வெசும திட்டத்தில் பாதிக்கப்பட்டவர்கள் ஜூலை 10 வரை மேன்முறையீடு செய்யலாம்

கொழும்பு, ஜூன் 27

அரசியல் தூண்டுதல்கள் அல்லது வெளி அழுத்தங்களுக்கு அடிபணியாமல் ஜூலை 10 ஆம் திகதி வரையான மேன்முறையீட்டு காலத்துக்குள் பிரதேச செயலாளர்களை தொடர்பு கொள்ளுமாறு அரசாங்கம் பயனாளர்களை அறிவுறுத்தியுள்ளது. இதற்கமைய விரைவில் மேன்முறையீட்டை சமர்ப்பிக்குமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்குள் தகுதியானவர்களை தெரிவு செய்வதில் குறைபாடுகள் இருப்பின் அது உடனடியாக நிவர்த்தி செய்யப்படும். இது தொடர்பில் மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் சகல தரப்பினருடனும் கலந்துரையாடத்திட்ட மிடப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மாற்றுத்திறனாளிகள், பாதிக்கப்படக்கூடியவர்கள், ஏழைகள் மற்றும் மிகவும் ஏழ்மையானவர்கள் ஆகிய 4 சமூகப் பிரிவுகளின் கீழ், அஸ்வெசும நலன்புரி நன்மைகள் வழங்கப்படுவதுடன், ஊனமுற்றோர், முதியோர் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கு வழமை போன்று உரிய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கிய நலன்புரி கொடுப்பனவுகளுக்குத் தகுதியானவர்களைக் கண்டறியும் வேலைத்திட்டத்தின் தரவு சேகரிப்புப் பணியில் 6,728 உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்த செயல்பாட்டில் குறைபாடுகள் காணப்படுகின்றன என்று சில தரப்பினர் குற்றஞ்சாட்டியுள்ள நிலையில், அஸ்வெசும நலன்புரி நன்மைகள் திட்டத்தின் பயனாளிகளை தெரிவு செய்வதில் அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு மேன்முறையீடுகள் மற்றும் முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசத்தை ஜூலை 10 ஆம் திகதி வரையில் நீடிப்பதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் என்ற வகையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன அறிவித்துள்ளார்.

(ஐ)

# அஸ்வெசும திட்டம்: 17 ஆயிரம் ஆட்சேபனை

கொழும்பு, ஜூன் 27

வெளியிடப்பட்டுள்ள அஸ்வெசும நிவாரணப் பயனாளிகளின் பட்டியலுக்கு எதிராக 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆட்சேபனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதாகக் கூறி ஏராளமான பொது மக்கள் நாடு முழுவதும் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கடன் அட்டைகளின் வட்டிவீதம் குறைப்பு

கொழும்பு, ஜூன் 27

கடன் அட்டைகளுக்கான வட்டி விகிதம் ஜூலை முதலாம் திகதி முதல் குறைக்கப்படவுள்ளது.

இதன்படி, கடன் அட்டைகளுக்கு அறவிடப்படும் 36 சதவீதமான வருடாந்த வட்டி 34 சதவீதமாக குறைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடன் அட்டைகளுக்கான வட்டி விகிதங்கள் மிக அதிகமாக இருப்பதாக வாடிக்கையாளர்கள் முறைப்பாடுகளை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)



# திருட்டுகளுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 27

சுன்னாகம் மற்றும் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற பல்வேறு திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய இரு சந்தேக நபர்களை காங்கேசன்துறை மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அளவெட்டியில் பாடசாலை அதிபர் ஒருவரின் வீட்டினுள் புகுந்த திருடர்கள் சுமார் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இலத்திரனியல் பொருட்களை திருடிச் சென்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை மாவட்ட குற்ற தடுப்பு பொலிஸ் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் நிதர்சன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் நடத்திய விசாரணைகளில் அளவெட்டியை சேர்ந்த 21 வயது மற்றும் 25 வயதான இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதான சந்தேக நபர்களிடமிருந்து திருடப்பட்ட இலத்திரனியல் பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றினர். கைதான சந்தேக நபர்கள் தெல்லிப்பழை பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டனர்.

இவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் சுன்னாகம், தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற பல திருட்டு சம்பவங்களுடன் இவர்களுக்கு தொடர்பு இருப்பது தெரிய வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-03)

# உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு; வங்கி வைப்பு பாதிக்கப்படாது

## மத்திய வங்கி ஆளுநர் சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 27

உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்கும் நடவடிக்கையில் நாட்டிலுள்ள எந்தவொரு வங்கியிலும் வைப்புத்தொகை பாதிக்கப்படாது என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க உறுதியளித்துள்ளார்.

சிறப்பு அறிக்கை ஒன்றை விடுத்துள்ள இலங்கை மத்திய வங்கி ஆளுநர் வீரசிங்க, உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு செயல்பாட்டுக்கு தேவையான கால அவகாசத்தை பெற்றுக் கொள்வதற்காக நாளை மறுதினம் முதல் ஜூலை 3ஆம் திகதி வரை நீடிக்கப்பட்ட வங்கி விடுமுறை அறிவிக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

வர்த்தக வங்கிகள் மற்றும் வங்கிகள் அல்லாத நிறுவனங்களில் மக்கள் வைத்திருக்கும் வங்கி வைப்புத் தொகைகளில் குறைப்பு ஏற்படாது எனவும், தற்போது பெற்றுக்கொண்டிருக்கும் வட்டி விகிதங்களில் குறைப்பு ஏற்படாது எனவும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க வலியுறுத்தியுள்ளார்.

உள்நாட்டுக் கடன் மேம்படுத்தப்பட்டாலும், குறிப்பிட்ட வட்டி விகிதங்களை வழங்க வங்கிகள் ஒப்புக்கொண்டால், வைப்பாளர்கள் அதே விகிதத்தைப் பெறுவார்கள் என்று ஆளுநர் கூறினார். (ஐ)

# கம்போடியா செல்கிறார் கோட்டாபய

கொழும்பு, ஜூன் 27

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த வாரம் கம்போடியா மற்றும் லாவோஸ் ஆகிய நாடுகளுக்கு செல்ல தயாராகி வருகிறார் என்று கூறப்படுகினறது.

அவர் தனிப்பட்ட - உல்லாசப் பயணமாக இந்த நாடுகளுக்கு செல்லவுள்ளார் என்றும் கூறப்பட்டது. (ஐ)

# அதிவேக நெடுஞ்சாலையில் ரூ. 29 கோடி கம்பிகள் திருட்டு

கொழும்பு, ஜூன் 27

கட்டுநாயக்கா அதிவேக நெடுஞ்சாலையில் சுமார் 29 கோடி ரூபாய் பெறுமதியான செப்பு கம்பிகள் திருடர்களால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளன என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான திருட்டுகள் நெடுஞ்சாலைகளுக்கு கடும் சிக்கலாக மாறியுள்ளது.

திருடர்கள் செப்பு கம்பிகள், மற்றும் மின்சார கேபிள்களை நெடுஞ்சாலைகளில் இருந்து அகற்றுகிறார்கள். மற்றைய நெடுஞ்சாலைகள் மற்றும் புதிய களனி பாலம் போன்றவற்றிலும் இதே நிலையே காணப்படுகிறது என்றும் இங்கு ஆணிகள் வெட்டப்படுதல் மற்றும் செப்பு கம்பிகளை வெட்டுதல் பெரும் பிரச்னையாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

## யாழ். பல்கலை துணைவேந்தர் பதவி

# மூவரைத் தெரிவு செய்வதற்காக பேரவை ஜூலை 12இல் கூடுகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் அடுத்த துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்துள்ள நால்வரில் மூவரை திறமைப் புள்ளி ஒழுங்கில் தெரிவு செய்வதற்கான விசேட பேரவை அமர்வு எதிர்வரும் ஜ/லை 12 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

நேற்று 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எட்டபட்டுள்ளது.

தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவின் பதவிக் காலம் எதிர்வரும் ஓகஸ்ட் 28ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், பல்கலைக்கழகப் பேரவையின் பதவிவழிச் செயலாளரான பதிவாளரால் துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அதன் அடிப்படையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மூவரும், கிழக்குப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவருமாக நான்கு பேர் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருந்தனர்.

எதிர்வரும் ஜூலை 12 ஆம் திகதி நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ள விசேட பேரவைக் கூட்டத்தில் வைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்படும் நிபுணர் ஒருவரின் கண்காணிப்புடன் விண்ணப்பித்திருக்கும் மூவரினதும் கல்வித் தகைமை, அனுபவம், மற்றும் ஆளுமைத் திறன்களை மையப்படுத்தி, பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையில் வரையறுக்கப்பட்ட 7 வகைப் புள்ளித் திட்டத்தின் படி பேரவை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகப் புள்ளிகளையிடுவர்.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பெறும் மொத்தப் புள்ளிகளின் படி - திறமை அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களின் விபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும். பல்கலைக் கழகச் சட்டத்தின் படி ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில், பேரவையினால் முன்மொழியப்பட்ட மூவரில் இருந்து ஒருவரைத் தெரிவு செய்து அவரைத் துணைவேந்தராக ஜனாதிபதி பிரகடனம் செய்வார்.

தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசியர் செ. கண்ணதாசன் மற்றும் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் முன்னாள் பீடாதிபயும், சிரேஷ்ட பேராசிரியருமான தி. வேல்நம்பி ஆகியோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்தும், விலங்கியல் துறைப் பேராசிரியர் பி. வினோபாபா கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இருந்தும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
27.06.2023 செவ்வாய்க்கிழமை

சோபகிருது வருடம், ஆனி 12

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# ரணிலை எதிர்கொள்ளுதல்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செல்வாக்கு சர்வதேச மட்டத்தில் உயர்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழரசு கட்சி மற்றும் விக்னேஸ்வரன் அணியினரே காரணமென்று அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் (முன்னணி) தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருக்கின்றார். அவர் இவ்வாறு கூறுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை - ஏனெனில், தங்களை மட்டுமே சரியானவர்களென்று நம்பும் ஒரு கூட்டத்தினர் அவ்வாறுதான் பேசுவார்கள். உண்மையிலேயே ரணிலின் செல்வாக்கு சர்வதேச மட்டத்தில் அதிகரிப்பதற்கு மேற்படி கட்சிகளா காரணம்?

ரணிலின் செல்வாக்குக்கும் தமிழர்களுக்கும் ஒரு தொடர்பும் இல்லை. உண்மையில், ரணிலை செல்வாக்கு இழக்கச் செய்தவர்களே தமிழர்கள் தான். ஏனெனில், ரணில் 2005 ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றிருக்க வேண்டியவர். தமிழ் மக்கள் தேர்தலில் பங்களிக்காமையால் சில இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் மகிந்த ராஜபக்ஷவிடம் தோல்வியடைந்தார். அந்தத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் தீர்மானகரமான பங்கை வகித்திருந்தன.

தேர்தலில் ரணில் தோல்வியடைந்தமையால் அவரின் நகர்வுகள் அனைத்தும் முடக்கப்பட்டன. அதன் பின்னர் இறுதிவரையில் அவரால் வெற்றிபெற முடியவேயில்லை - ஆகக் குறைந்தது, யுத்தத்துக்குப் பின்னர் இடம்பெற்ற மூன்று ஜனாதிபதி தேர்தல்களின்போதும் ரணிலால் ஜனாதிபதி வேட்பாளராகக்கூட வரமுடியவில்லை. இந்த நிலையில் ரணிலின் செல்வாக்குக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது விரல் நீட்டுவதானது முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடுவதற்கு ஒப்பானது.

ரணில் அடிப்படையில் மேற்கு சார்பான ஓர் அரசியல் தலைவர். இதில் இரகசியம் ஒன்றுமில்லை. ரணில் 2005இல் உலகின் சக்திவாய்ந்த கட்சிகளின் கூட்டமைப்பான சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தின் துணைத் தலைவராக இருந்தவர். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் 2005 ஜனாதிபதி தேர்தலில் அவர் வெற்றிபெற வேண்டும் - அதன் மூலம், அவரின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிக்குக் கொண்டுவர வேண்டுமென்பதில் அப்போதைய அமெரிக்க குடியரசு கட்சியின் நிர்வாகம் பிரத்தியேக ஈடுபாட்டை காண்பித்தது. ஏனெனில், குடியரசு கட்சி ஜனநாயக ஒன்றியத்தின் நிறுவுனர்களில் ஒன்றாகும்.

இந்த விடயங்கள் தமிழ் சூழலில் பேசப்படுவதில்லை. தற்போது ஜனநாயக ஒன்றியத்தின் ஆசிய - பசுபிக் ஒன்றியத்தின் தலைவராகவும் (Chairman Asia Pacific Democrat Union) ரணில்தான் இருக்கின்றார். இவ்வாறான பின்னணிகளுடன் இருக்கின்ற ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச செல்வாக்கை உயர்த்துவதற்கு தமிழ் கட்சிகள் எதற்கு?

உண்மையில் ரணிலை கையாளும் தகைமையுடன் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் எவையுமே இல்லை. அரசாங்கத்துடன் இருக்கும் கட்சிகள் பற்றி பேசுவதற்கு ஒன்றுமில்லை. அவர்களால் எதனையும் அரசியல் ரீதியாக செய்துவிட முடியாது. எனவே, தமிழ்த் தேசிய கட்சிகள் என்போர் ரணில் விக்கிரமசிங்க போன்ற ஆளுமைமிக்க - அதேவேளை சர்வதேச ரீதியில் நன்கறியப்பட்ட - அங்கீகரிக்கப்பட்ட ஒருவரை கையாளுவதென்பது இலகுவான விடயமல்ல. இதனை கருத்தில் கொண்டுதான் தமிழ்த் தேசிய கட்சிகள் ஒவ்வோர் அடியையும் கவனமாக எடுத்து வைக்க வேண்டும்.

விடயங்களை கையாளாமல் விட்டுவிட்டு பின்னர் ரணில் விக்கிரமசிங்க ஏமாற்றிவிட்டார் - என்று மேடைகளில் பேசுவதில் பயனில்லை. அதேவேளை ஏனைய கட்சிகளை விடவும் தாங்களே சரியானவர்களென்று வாதிடும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தங்களின் கூற்றை செயலில் நிரூபித்துக் காண்பிக்க வேண்டும். ரணிலின் சர்வதேச செல்வாக்கை குறைப்பதற்காக அவர்கள் செயல்பட வேண்டும். அதற்காக சர்வதேச மட்டத்தில் தாங்கள் மேற்கொண்ட பணிகளை வெளிப்படுத்த வேண்டும்.

# வாகன இலக்க தகடுகள் தொடர்பான அறிவித்தல்!

*யாழ்ப்பாணம், ஜூன் 27*

புதிதாக வாகனங்களை பதிவு செய்தவர்கள், வாகன உரிமை மாற்றம் செய்தவர்கள் வாகன இலக்கத் தகடுகளை பெற்றுக்கொள்ள முடியும் என்று யாழ். மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் அறிவித்துள்ளது.

மோட்டார் வாகன போக்குவரத்துத் தலைமை பணிமனையில் இருந்து கடந்த 21ஆம் திகதி உரிய வாகன இலக்கத் தகடுகளின் பட்டியலை அனுப்பி வைத்துள்ளது.

இந்தப் பட்டியல் யாழ். மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகங்களிலும், மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொது மக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், இதனை மாவட்ட செயலக இணை யத்தளத்திலும் பார்வையிட முடியும்.

புதிதாக வாகனங்களை பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவு புத்தகம், தேசயி அடையாள அட்டை என்பவற்றையும் வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத் தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும்தாள் (ஸ்ரிக்கர்) என்பவற்றையும் யாழ். மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து பணிமனையில் குறிப்பிடப்பட்ட திகதியில் குறித்த நேரத்துக்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று உதவி ஆணையாளர் ஆர். சிவகரன் அறிவித்துள்ளார்.

# பயணிகள் பேருந்து விபத்து; 20 பேர் காயங்களுக்கு இலக்கு

## ஐவரின் நிலை கவலைக்கிடம்

*கொழும்பு, ஜூன் 27*

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சொகுசு பேருந்துடன் பயணிகள் மோதிய விபத்தில் 20 பேர் காயமடைந்தனர். இதில், ஐவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இரத்தினபுரி - கொழும்பு பிரதான வீதியில் எஹெலிய கொடை பிரதேசத்தில் புஸ்ஸல்லா பயிற்சி நிலையத்துக்கு அருகே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் தனியார் பயணிகள் பேருந்து வீதியை விட்டு விலகி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சொகுசுப் பேருந்தின் பின்பகுதியில் மோதியது.

இதில், 20 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஐவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# யாழ். மாநகர சபையின் நடமாடும் சேவை நாளை

*யாழ்ப்பாணம், ஜூன் 27*

யாழ். மாநகர வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடமாடும் சேவை ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள எஸ். ரி. ஆர். திருமண மண்டப நுழை வாயிலில் நடைபெறவுள்ளது.

இதில், வட்டாரம் 14, 15ஆம் வட்டாரங்களுக்கான ஆதன வரி அறிவித்தல் படிவம் - சோலை வரி வழங்கல், பெயர் மாற்ற விண்ணப்ப படிவம் வழங்கல், சைக்கிள் உரிமம் வழங்கல் போன்ற சேவைகள் வழங்கப்படவுள்ளன என்று யாழ். மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார்.

"பொது மக்களால் இதுவரை காலமும் செலுத்தாதுள்ள ஆதனவரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு ஆதனவரி போன்றவற்றை பெற்று யாழ். மாநகர சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிப்படுத்த திட்டமிட்டுள்ளோம். அத்துடன், நடப்பாண்டின் ஆதன வரியை முழுமையாக செலுத்தும் பட்சத்தில் மூன்றாம், நான்காம் காலாண்டுக்கான ஆதனவரியில் 5 வீதத்தை கழிவாகப் பெற்றுக்கொள்ளலாம்", - என்றும் ஆணையாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# யாழ். நகரில் மோதலுக்கு தயாரான ஐவர் கைது!

*யாழ்ப்பாணம், ஜூன் 27*


யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் மோதல் ஒன்றில் ஈடுபடத் தயாராக இருந்த குழுவை சேர்ந்த ஐவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரு குழுக்கள் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் மோதலுக்கு தயாராகி வருகின்றன என்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸாரை கண்டதும் மோதலில் ஈடுபட இருந்தவர்கள் தப்பியோடினர். அவர்களை துரத்திய பொலிஸார் ஐவரை கைது செய்தனர்.

கைதானவர்களிடம் இருந்து கூரிய ஆயுதங்களை பொலிஸார் மீட்டனர். அத்துடன், தப்பியோடியவர்களை கைது செய்யவும் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். அமோகமான நாள்.

**இடபம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். புதுமை படைக்கும் நாள்.

**மிதுனம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உழைப்பால் உயரும்.

**கடகம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள் உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் அடைவீர்கள். உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும்.

**சிம்மம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் இழுத்து போட்டு பார்க்க வேண்டி வரும். வியாபாரத்தில் வேலையாட்கள் அதிருப்தி அடைவார்கள். வேலைச்சுமை அதிகரிக்கும்.

**துலாம்**
குடும்பத்தை பற்றிய கவலைகள் வந்து போகும். புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். வியாபாரத்தில் பாக்கிகளை போராடி வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் சோர்வு வந்து நீங்கும்.

**விருட்சிகம்**
ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் நினைத்ததை முடிப்பீர்கள். இனிமையான நாள்.

**தனுசு**
எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். அலுவலகத்தில் மரியாதைக் கூடும்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் உண்டு. திடீர் பணவரவு உண்டு. மேலதிகாரி உங்களை மதிப்பார். புதிய யுக்திகளை கையாண்டு வியாபாரத்தை பெருக்குவீர்கள். புதிய பாதை தெரியும்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான வியாபாரத்தில் வேலையாட்களை பகைத்து கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**மீனம்**
பிள்ளைகள் உங்கள் அருமையைப் புரிந்துக் கொள்வார்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள்.

# ஐக்கிய முற்போக்கு கூட்டணியாலேயே மோடியின் அரசு உயர்ந்து நிற்கின்றது!

## முன்னாள் நிதியமைச்சர் சிதம்பரம்

*புதுடில்லி, ஜூன் 27*

மோடி தலைமையிலான அரசு சில இடங்களில் உயர்ந்து நிற்கிறது என்றால் அதற்கு, அது முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் தோள் மீது நிற்பதுதான் காரணம் என ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

மோடி அரசின் 9 ஆண்டுகள் சாதனைகள் குறித்து நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் கட்டுரைக்கு அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் முன்னாள் மத்திய நிதியமைச்சருமான ப. சிதம்பரம், இந்நாள் நிதியமைச்சருக்கு பதில் அளிக்கும் விதமாக தனது ருவிற்றர் பக்கத்தில் நீண்ட பதிவை நேற்று வெளியிட்டார்.

அதில், “மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், மோடி அரசின் சாதனைகளை விளக்கி ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அவர் மேற்கோள் காட்டிய பல எடுத்துக்காட்டுகள் உண்மையானவை. 5 அல்லது 10 வருடங்கள் ஆட்சி செய்த ஒவ்வோர் அரசாங்கமும் உண்மைகளை தெரிவித்ததைப் போல இவையும் உண்மையே.

மத்திய அரசை நீதிமன்றத்துக்கு அழைத்துச் சென்ற வழக்குகளில் எதிர்க்கட்சிகள் தோல்வியைச் சந்தித்தன எனக் கூறி 5 உதாரணங்களை எடுத்துக் கூறியுள்ளார். அவர் கூறியவைகளில் மூன்று தவறானவை. பாராளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றுவதற்கு முன்பே உச்ச நீதிமன்றம் முத்தலாக்-ஐ சட்டவிரோதம் எனக் கூறியது. சட்டப்பிரிவு 370 வழக்கு, உச்சநீதிமன்றத்தால் இன்னும் விசாரிக்கப்படவில்லை. ஜி. எஸ். டி. சட்டம் குறித்து பல வழக்குகள் இன்னும் நிலுவையில் உள்ளன.

ஒவ்வோர் அரசாங்கத்தின் ஆட்சிகாலத்திலும் சிலபல சாதனைகள் எட்டப்படும். மோடி அரசும் அவ்வாறே செய்துள்ளது. என்றாலும் மோடி அரசு சில இடங்களில் உயர்ந்து நிற்பதாக கருதினால் அது, முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் தோள் மீது நிற்பதே காரணமாக இருக்கும்”. இவ்வாறு ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார். (ஐ)

# தமிழக காங்கிரஸ் தலைமை இந்த வாரத்தில் மாற்றப்படும்

## அழகிரி அவசரமாக டில்லி பறந்தார்



*சென்னை, ஜூன் 27*

தமிழக காங்கிரஸ் தலைவரை மாற்ற டில்லி தலைமை திட்டமிட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த பரபரப்பான சூழலில் தமிழக காங்கிரஸ் தலைவர் கே. எஸ். அழகிரி நேற்று முன்தினம் டில்லி புறப்பட்டு சென்றார்.

தமிழக காங்கிரஸ் தலைவராக இருக்கும் கே. எஸ். அழகிரி, இந்தப் பதவியில் நான்கரை ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார். கடந்த 25 ஆண்டுகளில் யாரும் இந்தப் பதவியில் 3 ஆண்டுகளுக்கு மேல் நீடித்தது இல்லை. கடந்த ஒன்றரை ஆண்டுகளாக கே. எஸ். அழகிரியையும் மாற்ற வேண்டும் என்று மூத்த தலைவர்கள் பலர் தொடர்ந்து, டில்லி தலைமைக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

இருப்பினும், 2019 மக்களவை தேர்தல், 2021 சட்டப்பேரவை தேர்தல், 2022 நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் போன்றவற்றை தனது தலைமையில் சந்தித்து, கூட்டணியில் ஒதுக்கி இருந்த பெரும்பாலான இடங்களில் வெற்றியை பெற்றுக்கொடுத்தார்.

இந்நிலையில், இன்னும் 9 மாதங்களில் மக்களவை தேர்தல் அறிவிப்பு வெளியாக வாய்ப்புள்ள நிலையில், அதற்கு தமிழ்நாடு காங்கிரஸ் தயாராகிறது. இதனால் புதிய தலைமையின் கீழ் தேர்தலை சந்திக்க விரும்புகிறது.

இந்நிலையில், டில்லி சென்றுள்ள கே. எஸ். அழகிரி காங்கிரஸின் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே மற்றும் ராகுல் காந்தி ஆகியோரை சந்திக்கவுள்ளார். இந்த வாரத்தில் தமிழக தலைமையில் மாற்றம் வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

# தி. மு. க. கூட்டணியின் கட்சிகள் அ. தி. மு. கவில் இணைய வாய்ப்பு

## முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார்

*சென்னை, ஜூன் 26*

தி. மு. க. கூட்டணியில் உள்ள கட்சிகள், அதிலிருந்து விலகி அ. தி. மு. கவுடன் இணைய வாய்ப்புள்ளது என்று முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பாராளுமன்றத் தேர்தலில் அ. தி. மு. க. தலைமையிலேயே கூட்டணி என்றும் அவர் கூறியுள்ளார்.

நேற்று நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற அவர்,

தமிழகத்தில் முறையாக ஆட்சி நடத்த முடியாத முதல்வர் ஸ்டாலினால் பீஹாரில் நடைபெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்தில் ஒன்றும் செய்துவிட முடியாது.

பாராளுமன்ற தேர்தலுக்கு இன்னும் 10 மாதங்கள் உள்ளன. அரசியலில் யாரும் நண்பரும் இல்லை - எதிரியும் இல்லை. இப்போது பலர் கூடியுள்ளனர். இது தொடருமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஸ்டாலின் தலைமையிலான ஆட்சிக்கு கெட்ட பெயர் உள்ளது. இந்த ஆட்சி தானாகவே விழுந்துவிடும்.

டில்லி சென்றுள்ள ஆளுநர், அங்கு ஒரு வாரம் தங்குவார், உள்துறை அமைச்சரை சந்திப்பார் என்று கூறப்படுகிறது. இந்த ஆட்சி இரத்து செய்யப்பட்டால் மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள். ஏற்கெனவே, கருணாநிதி ஆட்சி கலைக்கப்பட்டது. இவர்களுக்கு ‘கலைப்பு’ ராசி உண்டு. அதனால் இந்த ஆட்சி கலைக்கப்பட வாய்ப்புள்ளது.

தேர்தல் நெருங்க நெருங்க, தி. மு. க. கூட்டணியில் இருந்து வெளியேறி, பல கட்சிகள் அதிமுக தலைமையிலான கூட்டணியில் சேர்வதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளது. அ. தி. மு. கவுடன் இணையும் கட்சிகள் தொடர்பான விவரங்களை இரகசியமாக வைத்திருக்கிறோம்.



மக்களவைத் தேர்தல் முடியும்வரை மாதந்தோறும் ஓர் அமைச்சர் கைது செய்யப்படுவார். வருவாய் துறையின் பார்வையில் இருந்து செந்தில் பாலாஜியும், மற்ற அமைச்சர்களும் தப்பிக்க முடியாது - என்றார். (ஐ)

# ராஜபக்ஷர்களால் மட்டுமே நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க முடியும்!

## கூறுகின்றது பொதுஜன பெரமுன

கொழும்பு, ஜூன் 27

**ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியானதும் எமது ஜனாதிபதி வேட்பாளரை நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்துவோம்.**

**நாட்டின் ஒருமைப்பாட்டை ராஜபக்ஷர்களால் மாத்திரமே பாதுகாக்க முடியும் என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**

கலாவெவபகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம். கட்சியின் உள்ளக விவகாரங்களில் ஜனாதிபதி தலையிடுவதில்லை, நாங்களும் ஐக்கிய தேசியக் கட்சிகளின் அரசியல் செயல்பாடுகளில் தலையிடுவதுமில்லை.

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் வீழ்ச்சியடைவதற்கு பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன.



பொருளாதாரமா அல்லது மக்களின் சுகாதாரமா என்ற கேள்வி எழுந்த போது பொதுஜன பெரமுன அரசாங்கம் நாட்டு மக்களின் உயிரை பாதுகாக்க முன்னுரிமை வழங்கியது.

கோவிட் பெருந்தொற்று தாக்கத்தை கட்டுப்படுத்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளை பெரும்பாலானோர் மறந்துவிட்டனர்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார், யார் என பல்வேறு தரப்பினர் கேள்வி எழுப்புகிறார்கள்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியானதும் எமது ஜனாதிபதி வேட்பாளரை அறிவிப்போம்.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிடும் கருத்து அவர்களின் தனிப்பட்ட நிலைப்பாடே தவிர கட்சியின் நிலைப்பாடல்ல.

நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க ராஜபக்ஷர்கள் அளப்பரிய சேவையாற்றியுள்ளார்கள். ராஜபக்ஷர்களால் மாத்திரமே நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க முடியும். எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் மக்கள் ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை நிச்சயம் தோற்றுவிப்பார்கள்-என்றார். (அ)

# முன்னாள் சுகாதார அமைச்சர் மின்தூக்கி உடைந்து உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 27

மின்தூக்கி உடைந்து கீழே விழுந்ததில், படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த முன்னாள் சுகாதார அமைச்சர் டாக்டர் பி.எம்.பீ.சிறில் உயிரிழந்தார்.

முன்னாள் அமைச்சர் தனது வீட்டின் வெளியே பொருத்தப்பட்டிருந்த மின்தூக்கியின் உதவியுடன் மூன்றாவது மாடியில் கட்டடப் பணிகளைப் பார்வையிடுவதற்காக, தனது சாரதியுடன் சென்றுகொண்டிருந்த போது, மின்தூக்கி உடைந்து கீழே விழுந்தது.

இந்த விபத்தில் முன்னாள் அமைச்சர், அவரது சாரதி ஆகியோர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

ஆயினும், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த முன்னாள் அமைச்சர் உயிரிழந்தார். (அ)

# இந்த ஆண்டில் இதுவரையில் 200 டெங்கு மரணங்கள் பதிவு

கொழும்பு, ஜூன் 27

இவ்வாண்டில் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் டெங்கு காய்ச்சல் காரணமாக 200 மரணங்கள் பதிவாகியுள்ளன.

அதன்படி, கொழும்பு மாவட்டம் அதிக அபாயம் மிக்க வலயமாக இனங்காணப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, முப்படையினரின் ஒத்துழைப்புடன் இவ்வாரம் கொழும்பில் சுற்றுச் சூழலை தூய்மைப்படுத்தும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- கடந்த 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பதிவானதை விட கடந்த 6 மாதங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

டெங்கு தீவிர நிலைமையை கட்டுப்படுத்த விசேட அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்ட நிலையில் அக்குழுவினால் நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன-என்றார். (அ)

# தேஷபந்து தென்னக்கோனுக்கு எதிரான அழைப்பாணை இரத்து!

கொழும்பு, ஜூன் 27

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய தப்பியோடிய பின்னர் அரகலய செயற்பாட்டாளர்கள் ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்தபோது ஒரு கோடியே எழுபத்தெட்டு இலட்சம் ரூபாய் பணம் மீட்கப்பட்ட விவகாரத்தில், மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னக்கோனுக்கு, சந்தேக நபராக ஆஜராகுமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் விடுக்கப்பட்ட அழைப்பாணையை செல்லுபடியற்றதாக்கி மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ. மரிக்கார் ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. (அ)

# கோழி இறைச்சி, முட்டை பிரச்னைக்கு மூன்று மாதங்களுக்குள் தீர்வு கிட்டும்!

## கூறுகிறார் மகிந்த அமரவீர

கொழும்பு, ஜூன் 27

கோழி இறைச்சி மற்றும் முட்டை தொடர்பான பிரச்னைகள் எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் முற்றாகத் தீர்க்கப்படும் என நம்புவதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

கோழிப்பண்ணை தொழிலில் இருந்து வெளியேறும் பல வர்த்தகர்களே இந்த நெருக்கடிக்கு காரணம் என அமைச்சர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- கோவிட்-19 நெருக்கடி காலத்தில், முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலைகள் வெகுவாகக் குறைந்திருந்தன. தொழில்துறையில் இருப்பவர்கள் தாக்குப்பிடிக்க முடியாத



காரணத்தால் தங்கள் வியாபாரத்தை கைவிட்டனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக தாய்க் கோழிகள் இறக்குமதியும் இடைநிறுத்தப்பட்டது.

உற்பத்தி குறைவினால் தட்டுப்பாடு ஏற்பட்டு விலையும் அதிகரித்துள்ளது.

நியாயமான விலையில் அத்தியாவசியப் பொருட்கள் தேவைப்படும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டுதான் முட்டைகளை இறக்குமதி செய்ய முடிவெடுத்தோம்.

கடந்த சில வாரங்களாக உள்ளூர் பண்ணைகளில் கணிசமான எண்ணிக்கையில் குஞ்சுகள் பொரித்துள்ள நிலையில், அவை உற்பத்தியை அதிகரிக்க உதவும்.

எனவே தற்போதுள்ள தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு அடுத்த மூன்று மாதங்களுக்குள் தீர்க்கப்படும் என நம்புகிறோம்.

இந்த ஆண்டு இறுதிக்குள் முட்டைகளை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் இருக்காது-என்றார். (அ)

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு 5 மாதங்களில் ரூ.60 மில்லியன் இலாபம்



கொழும்பு, ஜூன் 27

கடந்த ஐந்து மாதங்களில் மாத்திரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறுபது மில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியுள்ளதாக கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அட்மிரல் ரவீந்திர விஜயகுணரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இதன் மூலம் கிடைக்கும் இலாபத்தை எதிர்காலத்தில் மக்களுக்கு வழங்கும் வகையில் கூட்டுத்தாபனம் செயற்படும். எதிர்காலத்தில் எரிபொருளின் விலையை குறைக்க நடவடிக்கை எடுப்போம்.

இந்த இலாபத்தை பெறுவதற்கு முறைகேடுகளை தவிர்க்கும் திறனே காரணம்-என்றார். (அ)

# சுகாதார அமைச்சில் உள்ள அதிகாரிகளின் கவனவீனம்!

## சுங்கத்தில் தேங்கியுள்ள தடுப்பூசிகள்

கொழும்பு, ஜூன் 27

சுகாதார அமைச்சின் அதிகாரிகள் உரிய நேரத்தில் அனுமதி பெறத் தவறியதை அடுத்து, உலக சுகாதார ஸ்தாபனத்தினால், கடந்த மாத ஆரம்பத்தில் இலங்கைக்கு நன்கொடையாக அனுப்பப்பட்ட மெனிங்கோகோகல் தடுப்பூசி தொகுதி, இன்னும் சுங்கத்தில் தேங்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஹஜ்ஜுக்குப் புறப்படும் நூற்றுக்கணக்கான இலங்கை முஸ்லிம்களுக்கு கட்டாய மெனிங்கோகோகல் தடுப்பூசி செலுத்தப்படவேண்டும் என்ற நிலையில் இந்த தகவல் வெளியாகியுள்ளது.

மூளைக்காய்ச்சல் இலங்கையில் அரிதானது என்றபோதிலும் மக்காவில் ஹஜ் செய்யும் யாத்திரிகர்களுக்கு மெனிங்கோகோகல் தடுப்பூசி என்பது சவூதி அதிகாரிகளால் விதிக்கப்பட்ட கட்டாயத் தேவையாகும்.

இந்த நிலையில், இலங்கையின் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திலோ அல்லது பதிவு செய்யப்பட்ட மருந்து நிறுவனங்களிலோ இந்த தடுப்பூசி கையிருப்பில் இல்லை என்று கொழும்பின் ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, உலக சுகாதார ஸ்தாபனத்திடம் இருந்து சுகாதார அமைச்சு 1000 மெனிங்கோகோகல் குப்பிகளை கோரியதாகவும் எனினும் 200 குப்பிகளுக்கு அனுமதி கிடைத்ததாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

எனினும், இந்த வரையறுக்கப்பட்ட அளவுகூட கொழும்பு துறைமுகத்தில் இருந்து சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவினால் எடுத்துச் செல்லப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# கடமை நேரத்தில் போதையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் சிக்கினார்

கொழும்பு, ஜூன் 27

கம்பஹா வைத்தியசாலை வளாகத்திற்குள் அமைக்கப்பட்டுள்ள காவல் துறைப்பிரிவில் மதுபோதையில் கடமையில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

வைத்தியசாலையின் நிர்வாகப் பிரிவினரால் வழங்கப்பட்ட தகவலுக்கு அமையவே குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் தொடர்பில் கம்பஹா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# தொல்லியல் விவகாரத்தில் தேரர்கள் தலையிடக்கூடாது

## அமைச்சர் விதுர அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 27

**தொல்பொருளியல் விவகாரத்தில் பௌத்த தேரர்கள் தலையிடுவதை நிறுத்தவேண்டும். அவர்களது செயல்பாடுகளாலேயே வடக்கு-கிழக்கிலுள்ள மக்களுக்கு காணி அபகரிப்பு குறித்து வீண் அச்சம் ஏற்படுகிறது. இதுகுறித்து பௌத்த தேரர்களிடம் பல சந்தர்ப்பங்களில் நேரடியாக தெரிவித்துள்ளபோதிலும், அவர்கள் அதனை ஏற்க முன்வரவில்லை என புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் குறிப்பிடுகையில்- தொல்பொருளியல் என்பது சட்டத்துக்குட்பட்ட விடயமாகும். தொல்பொருள் கட்டளை சட்டம் இன்றும் நடைமுறையிலுள்ளது. அதனை அனைவரும் பின்பற்ற வேண்டும்.

அத்தோடு இந்த விவகாரத்தில் பௌத்த தேரர்களும், அரசியல்வாதிகளும் தலையிடுவதையும் நிறுத்தவேண்டும். சட்டத்துக்கமைய தொல்பொருள் திணைக்களத்துக்கு மாத்திரம் அதன் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இடமளிக்க வேண்டும்.

அதனை விடுத்து தொல்பொருள் திணைக்களம் ஆய்வுகளை முன்னெடுக்கும் பகுதிகளுக்குச் சென்று அங்கு சில பௌத்த தேரர்களால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் காரணமாக வீண் பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றன. எனவே இந்த விடயத்தில் தலையிடுவதை அவர்கள் நிறுத்த வேண்டும்.

இந்து ஆலயங்களை அழிப்பதற்கோ , தமிழ் மக்களின் காணிகளை அபகரிப்பதற்கோ எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. தொல்பொருள் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் மாத்திரமே அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த விடயத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் இலாபத்தை ஈட்ட முயற்சிக்காமல் மக்களின் உண்மையான பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்க வட, கிழக்கு அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

# இந்திய முட்டைகளை விற்பனை செய்ய தடை

கொழும்பு, ஜூன் 27

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு பேக்கரிகளுக்கு வழங்கப்பட்ட முட்டைகளை பிற கடைகளுக்கு விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அவ்வாறு விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் வெளியில் விற்கும் வெதுபகங்களுக்கு முட்டை வழங்குவது உடனடியாக நிறுத்தப்படும் என்றும் அரச வர்த்தகம் மற்றும் பல்வேறு சட்டபூர்வ நிறுவனங்களின் தலைவர் ஆசிரி வாலிசுந்தர தெரிவித்தார்.

வெதுப்பக உரிமையாளர் ஒருவருக்கு வழங்கப்பட்ட ஒரு தொகுதி முட்டையை அவரது சகோதரரின் கடையில் விற்பனைக்கு வழங்கியதால் அந்த வெதுப்கத்துக்கு முட்டை வழங்குவது உடனடியாக நிறுத்தப்பட்டது.

இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதற்கான மற்றொரு காரணம் உள்ளூர் முட்டை விலையை குறைப்பதாகவும் உள்ளூர் முட்டைகளின் தட்டுப்பாடு நீங்கி விலை சீராகும் வரை இந்தியாவில் இருந்து முட்டை இறக்குமதி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# ஜனாதிபதியால் மட்டுமே நாட்டினை மீட்க முடியும்

## ருவான் விஜேவர்தன கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 27

ரணில் விக்கிரமசிங்கவால் மாத்திரமே இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரான ருவான் விஜயவர்த்தன தெரிவித்தார்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி என்பவற்றிடம் தெளிவாக வேலைத்திட்டம் இல்லை எனவும் அவர் கூறினார்.

வங்குரோத்து அடைந்திருந்த நாட்டை ரணில் விக்கிரமசிங்கவே மீட்டெடுத்தார். தற்போது நாணய நிதியக் கடன் கூட கிடைக்கப்பெற்றுள்ளது



எனவும் ருவான் விஜேவர்தன குறிப்பிட்டார். (அ)

# விபத்தில் 10 பேர் காயம் இருவர் கவலைக்கிடம்

கொழும்பு, ஜூன் 27

இறக்குவானை - குருவிட்ட பிரதான வீதியின் புஸ்ஸல்லாவை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முற்பகல் 9.45 அளவில் இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

பஸ் ஒன்று வீதியில் சென்றுக்கொண்டிருந்த பெண்கள் இருவர் மீது மோதியதுடன் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்ஸுடனும் மோட்டார் சைக்கிள்களுடனும் மோதுண்டதாக அவர் மேலும் கூறினார்.

சம்பவத்தில் 10 பேர் காயமடைந்துள்ளதாகவும், அவர்களில் இருவர் கவலைக்கிடமாக உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.




காயங்களுக்கு உள்ளானவர்கள் எஹெலியகொடை மற்றும் இரத்தினபுரி வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டதோடு, கவலைக்கிடமான இருவர் அவிசாவளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (அ)

# உறுதியளித்த 25 நீதிமன்றங்களில் ஒரு நீதிமன்றம் மட்டுமே செயலில்!

கொழும்பு, ஜூன் 27

நீதி அமைச்சகம் உறுதியளித்த, சிறிய பிரச்னைகளை தீர்ப்பதற்கான 25 நீதிமன்றங்களில் ஒன்று மாத்திரமே செயல்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 25 நீதிமன்றங்களும் இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதியில் இருந்து செயற்படும் என்று முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் பௌதிக மற்றும் மனித வளங்களின் கடுமையான பற்றாக்குறையின் காரணமாக இந்த செயல்முறை தடைப்பட்டுள்ளது.

குறித்த நீதிமன்றங்கள் சிறிய அளவிலான பிணக்குகளை விசாரணை செய்து, அதிகபட்சமாக 18 மாதங்களுக்குள் தீர்ப்புகளை வழங்கவேண்டும்.

அத்துடன் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னரும், சர்ச்சைக்குரிய தரப்பினரை அழைத்து விசாரணையைத் தொடராமல் சமரசம் செய்ய இந்த நீதிமன்றங்கள் முயற்சி செய்யலாம்.

இதனடிப்படையில் ஏனைய நீதிமன்றங்களின் சுமை குறையும் என எதிர்பார்க்கப்பட்டது.

கொழும்பு, கம்பஹா, காலி, மாத்தறை, கடுவெல, கண்டி, அனுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட நகரங்களில் மொத்தம் 25 சிறிய நீதிமன்றங்கள் முதலில் நிறுவப்படவிருந்தன.

எனினும் இதுவரை கொழும்பில் மட்டுமே ஒரு நீதிமன்றம் இயங்கி வருகிறது.

கட்டட வசதிகள், உபகரணங்கள் மற்றும் பயிற்சி பெற்ற பணியாளர்கள் இல்லாமையை இந்த நீதிமன்றங்கள் இயங்காமைக்கான முக்கிய காரணங்கள் என்று காரணம் கூறப்பட்டுள்ளது.

# நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் போதிய அரிசி கையிருப்பிலில்லை

கொழும்பு, ஜூன் 27

நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் தற்போது போதிய அரிசி கையிருப்பில் இல்லை என்ற தகவல் வெளியாகியுள்ளது.

விலை அதிகரிக்கும்போது அதனைக் கட்டுப்படுத்த சந்தைக்கு அரிசியை விநியோகிக்கும் வகையில் கையிருப்புக்களை பராமரிப்பதற்காக விவசாய அமைச்சு, ஏற்கனவே திறைசேரியிடம் நிதிக் கோரிக்கையை முன்வைத்தபோதும், அது ஐந்தாவது முறையாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்தே நெல் சந்தைப்படுத்தும் சபை, போதுமான அரிசி கையிருப்பில் கொண்டிருக்கமுடியவில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சபைக்கு திருப்தியான கையிருப்பை பேணுவதற்கு 6 பில்லியன் ரூபாய்கள் தேவை. ஆயினும் உடனடி நிலைமையை சமாளிக்க 2 பில்லியன்களை அமைச்சு கோரியபோதும், திறைசேரி வெறும் 250 மில்லியன் ரூபாய்க்கு மட்டுமே ஒப்புதல் அளித்துள்ளது என்று அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் ஏற்கனவே நெல் சந்தைப்படுத்தும் சபை, கையிருப்புக்களை பராமரிப்பதற்காக இரண்டு அரச வங்கிகளிடம் இருந்து பெற்ற 21 பில்லியன் ரூபாய்களை இன்னும் திருப்பிச் செலுத்தவில்லை என்று மத்திய வங்கியின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த இரண்டு கடன்களையும் வட்டியையும் திறைசேரியே தற்போது செலுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# எஞ்சியுள்ள அரசியல் கைதிகளையும் துரிதமாக விடுதலை செய்யவேண்டும்

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 27

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எஞ்சியுள்ள 19 தமிழ் அரசியல் கைதிகளையும் அரசாங்கம் துரிதமாக விடுதலை செய்ய வேண்டும் என்று குரலற்றவர்களின் குரல் அமைப்பு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளது.

கடந்த 23 ஆம் திகதி ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்ட கனகசபை தேவதாசனை குரலற்றவர்களின் குரல் அமைப்பின் அமைப்பாளர் முருகையா கோமகன் நேற்று நேரில் சென்று சந்தித்து கலந்துரையாடினார்.

இதனையடுத்து கருத்து வெளியிட்ட அவர்-

அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் அரசாங்கத்தின் செயற்பாடு வரவேற்கத்தக்கதாகும்.

மேலும், எஞ்சியுள்ள 19 தமிழ் அரசியல் கைதிகளை துரிதமாக விடுதலை செய்யவேண்டும்.

அத்தோடு, புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள தேவதாசனுக்கு மேற்கொள்ளவேண்டிய வைத்திய சேவைகளை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும் நலன்களுக்காகவும் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயல்படுவோம்- என்றார்.

(அ)

# இலங்கையிலிருந்து சீனாவுக்கு குரங்குகள் ஏற்றுமதி இல்லை!

## வனஜீவராசிகள் திணைக்களம் உறுதியளிப்பு

**கொழும்பு, ஜூன் 27**

**இலங்கையில் இருந்து சீனாவுக்கு குரங்குகளை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்க மாட்டோம் என வனஜீவராசிகள் மற்றும் பாதுகாப்பு திணைக்களத்தினால் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.**

இந்த நடவடிக்கைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, வனஜீவராசிகள் மற்றும் பாதுகாப்பு திணைக்களம் வழங்கிய உறுதிமொழி, சட்டமா அதிபரால் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டது.

அரசு நீதிமன்றத்துக்கு வழங்கிய உறுதிமொழியை பதிவு செய்வதற்காக இந்த வழக்கு அடுத்த ஜூலை 6 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இலங்கையில் இருந்து சீனாவுக்கு குரங்குகளை ஏற்றுமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்திருந்த கருத்துக்கு எதிராக 30 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இலங்கையின் வனவிலங்கு, இயற்கை பாதுகாப்புச் சங்கம் உட்பட பல விலங்கு ஆர்வலர்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

சீனாவுக்கு குரங்குகளை ஏற்றுமதி செய்வதற்கான எந்தவொரு முடிவையும் இரத்துச் செய்யுமாறு மனுதாரர்கள் கோரியிருந்தனர்.

மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி அமிலகுமார் அறிவுறுத்தலின்பேரில் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன, சட்டத்தரணிகளான பிரசாந்தி மகிந்தரத்ன, திலுமி டி அல்விஸ், லக்மினி வருசேவிதனே மற்றும் ருக்ஷான் சேனாதிர ஆகியோர் முன்னிலையாகினர். (அ)

# வீடு புகுந்து திருட முற்பட்டவரை நையப்புடைத்தனர் பொதுமக்கள்

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஜூன் 27

வவுனியா - பத்தினியார் மகிலங்குளம் கிராமத்தில் வீடு புகுந்து திருட முற்பட்ட நபரை பொதுமக்கள் நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மகிழங்குளம் கிராமத்தில் வீடொன்றுக்குள் குறித்த நபர் புகுந்து வீட்டிலுள்ள பொருட்களை திருட முயற்சித்துள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தில் வீட்டிலிருந்தவர்கள் கூச்சலிட்டதை யடுத்து சந்தேகநபர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

எனினும் சந்தேகநபரை மடக்கிப்பிடித்த மக்கள் அவரை நையப்புடைத்தனர்.

சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில், பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சந்தேகநபரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் பல தடவைகள் வவுனியா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதாகவும் தெரியவந்தது. (அ)

# அழகான வார்த்தைகளால் மக்களை ஏமாற்றுகின்றார்கள் அமைச்சர்கள்!

## ஜீ. எல். பீரிஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 27

அரசாங்கத்தின் அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிராக மக்களை விழிப்புணர்வூட்டுவதற்காக எதிர்க்கட்சி என்ற ரீதியில் ஒன்று திரண்டு வருவதாகவும் அரசாங்கத்தின் அமைச்சர்களும் அதிகாரிகளும் அழகான வார்த்தைகளால் மக்களை ஏமாற்றி வருவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் காங்கிரஸின் செய்தியாளர் மாநாட்டில் நேற்று கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வரலாற்றில் இதுவரை ஞாயிறு தினமன்று பாராளுமன்றம் கூடியதில்லை. இது என்னவென்று தெரியவில்லை. அதுவும் ஐந்து நாட்கள் தொடர்ந்து வங்கி விடுமுறை, பங்குச்சந்தைக்கும் பூட்டு. நாடே முடங்கும் நிலை.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு என்பது சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவு அல்ல. இது இலங்கை அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டது -என்றார். (அ)

# வறுமையில் வாழும் மக்கள் குறித்து ஜனாதிபதியின் நடவடிக்கை என்ன?

## கேள்வி எழுப்புகிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஜூன் 27

நாட்டில் வறுமையானவர்கள் தொடர்பாக சரியான புள்ளிவிவரங்களை மேற்கொள்ளாத அரசாங்கத்தினால் அஸ்வெசும திட்டத்தை எவ்வாறு சரியான முறையில் செயற்படுத்த முடியும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார்.

தெபரவெவ, உடுவில பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்து, உடனடியாக செய்யவேண்டிய பிரதான செயற்பாட்டை அவர் இன்னமும் செய்யவில்லை.

இந்த நாட்டின் வறுமையில் வாழும் மக்களை அடையாளம் காண அவர் எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.



மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் திணைக்களத்தின் ஊடாக அந்தப் பணி இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

ஒரு வீட்டின் வரவு-செலவு எவ்வாறு உள்ளதென்ற புள்ளிவிவரங்களை ஜனாதிபதி எடுக்கவில்லை.

இவ்வாறு எதனையும் மேற்கொள்ளாமல் அஸ்வெசும திட்டத்தில் எவ்வாறு உரிய பயனாளிகளைச் சேர்க்க முடியும்?

லேன் ஏசியா நிறுவனமானது, இந்நாட்டில் 30 இலட்சமாக காணப்பட்ட வறுமையானவர்களின் எண்ணிக்கை 70 இலட்சமாக உயர்வடைந்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.

14 வீதமாக காணப்பட்ட வறுமை நிலைமை 31 வீதமாக உயர்வடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இருக்க, வறுமையான 70 இலட்சம் பேரில், குறிப்பிட்ட ஒரு தரப்புக்கு மட்டும் நிவாரணத்தை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எந்தவொரு புள்ளிவிவரத்தையும் மேற்கொள்ளாமல், அரசாங்கத்தால் எவ்வாறு அஸ்வெசும திட்டத்தின் பயனாளிகளை தெரிவு செய்ய முடியும்? இதனால் இன்று, வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் பெரும்பாலானோர் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஒவ்வொரு பிரதேசத்திலும், ஒவ்வொரு கிராமசேவகர் மட்டத்திலும் வாழும் வறுமையானவர்களை முதலில் அடையாளம் கண்டு, அரசாங்கம் அவர்களுக்கு நிவாரணத்தை வழங்க வேண்டும்-என்றார். (அ)

# சமூகக் கட்டமைப்பில் தோற்றம் பெறும் நெருக்கடிகளுக்கு அரசே முழு பொறுப்பு!

## சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூன் 27

கடன் மறுசீரமைப்புக்களின் பின்னர் சமூக கட்டமைப்பில் தோற்றம் பெறும் நெருக்கடியை எதிர்கொள்ள அரசாங்கம் தயாராக இருக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கண்டி மல்வத்து மற்றும் அஸ்கிரிய விகாரைகளில் மத வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் தோல்வியடைந்துவிட்டதா இல்லையா என்பதை மக்கள் தீர்மானிக்கவேண்டும். அதற்கு தேர்தலை நடத்த வேண்டும்.

தற்போதைய முன்னேற்றம் தற்காலிகமானதே. சர்வதேச கடன்களை மாத்திரம் மறுசீரமைப்பதாக அரசாங்கம் குறிப்பிட்டது. ஆனால் தற்போது தேசிய கடன்களை மறுசீரமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பாராளுமன்றத்தின் ஊடாக அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக இந்த வாரம் பாராளுமன்ற கூட்டத்தொடர் இடம்பெறவுள்ளது.

தேசிய கடன் மறுசீரமைக்கப்படும்போது திறைசேரி உண்டியல்களை பெற்றவர்கள், திறைசேரி பிணை முறியங்களைக் கொள்வனவு செய்தவர்கள் பாதிக்கப்படுவதுடன், வங்கிக் கட்டமைப்பு, ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன நிதி நிலைமையில் பாதிக்கப்படும்.

ஆகவே தேசிய கடன் மறுசீரமைக்கப்படும்போது சமூக கட்டமைப்பில் பெரும்முரண்பாடுகள் தோற்றம் பெறும். அதனை எதிர்கொள்ள அரசாங்கம் தயாராக வேண்டும்.

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் தெளிவான செயற்திட்டங்களை ஐக்கிய குடியரசு முன்னணி சார்பில் அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளோம். இருப்பினும் அரசியல் காரணிகளை அடிப்படையாக கொண்டு எமது யோசனைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

ராஜபக்ஷர்களின் இரண்டு ஆண்டுகால நிர்வாகத்தில் 12 சதவீதமாக காணப்பட்ட ஏழ்மை நிலை 26 சதவீதமாக சடுதியாக அதிகரித்துள்ளது.

மொத்த சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என சர்வதேச மதிப்பீடுகள் குறிப்பிட்டுள்ள நிலையில் 22 இலட்ச குடும்பங்களுக்கு மாத்திரம் நிவாரணம் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது-என்றார். (அ)

# புடின் பலவீனம் அடைகிறாரா?

## கிளர்ச்சிகளை ஒடுக்கும் இயல்புக்கு மாறாக ‘வாக்னர்’ படைகளிடம் சமாதானம் பேசியது ஏன்?

புடினுக்கு ‘முதுகில் குத்துவது’ பிடிக்காது. அவர் துரோகத்தை அறவே வெறுப்பவர். ஆனாலும் தனது ராணுவத்தை எதிர்த்து கிளர்ச்சியில் ஈடுபட்டவர் மீது நடவடிக்கை எடுக்காமல் சமாதானம் பேசும் சூழலில் இருப்பது ஏன்? இது அவரது பலவீனத்தைக் காட்டுகிறதா?

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் அதிகாரத்திற்கு வந்ததிலிருந்து விளாதிமிர் புடின் தனது அதிகாரத்திற்கு எதிராக மிகப்பெரிய சவாலை எதிர்கொண்டது இதுவே முதல்முறை.

அந்த வியக்கத்தக்க 24 மணிநேர கிளர்ச்சி முடிவு வந்துவிட்டது. அதிபர் மாளிகைக்கும் வாக்னர் கூலிப்படைக்கும் இடையே ஓர் ஒப்பந்தம் உருவாகியுள்ளது. ஆகையால் வாக்னர் படையினர் தளத்திற்குத் திரும்புகின்றனர். ஒப்பந்தத்தின்படி, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. ஆனால், அவர்களது தலைவர் எவ்கெனி ப்ரிகோஜின் ரஷ்யாவை விட்டு வெளியேறி பெலாரூஸுக்கு செல்ல வேண்டும்.



அதிபர் புடினை பொறுத்தவரை, இந்த 24 மணிநேர நிகழ்வுகளில் அவரது தோற்றம் வழக்கமான வலிமையுடன் வெளிப்படவில்லை என்று கூறுகிறார் பிபிசி ரஷ்ய சேவையின் ஆசிரியர் ஸ்டீவ் ரோசென்பெர்க்.

மேலும், “ரோஸ்டோ நகரில் என்ன நடந்தது என்பதை நாம் பார்க்க வேண்டும். வாக்னர் என்ற ஒரு ‘தனியார் ராணுவம்’ ஒரு பெரிய ரஷ்ய நகரத்தில் ராணுவ தலைமையகத்தை வெளிப்படையாகவும் எளிதாகவும் கைப்பற்ற முடிந்துள்ளது. அதைக் கைப்பற்றிய பிறகு மாஸ்கோவை நோக்கி முன்னேறத் தொடங்கியது.

அதுமட்டுமின்றி, கிளர்ச்சி முடிந்த பிறகு, அதன் அடிப்படையாக இருந்த ப்ரிகோஜினை எதுவும் செய்ய முடியாது. அவர் ஒரு சுதந்திர மனிதர். ரஷ்யாவின் ராணுவத் தலைமையைக் கவிழ்க்க முயன்ற போதிலும், அவர் மீதான ஆயுதக் கலகம் குற்றச்சாட்டு கைவிடப்பட்டுள்ளது,” என்று ஸ்டீவ் ரோசென்பெர்க் விவரிக்கிறார்.

### ரஷ்யாவில் கிளர்ச்சியை ஏற்படுத்த வாக்னர் படை முடிவு செய்தது ஏன்?

“வாக்னர் குழுமத்தின் தலைவர் யெவ்கெனி ப்ரிகோஜின் ரஷ்ய ராணுவத்தில் உள்ள குறைபாடுகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் சூதாட்டத்தில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால், அவரது சுய வாய்ப்புகளை மிகைப்படுத்திக் கொண்டுவிட்டதாக” போர் ஆய்வுக்கான நிறுவனம் கூறுகிறது.

ப்ரிகோஜினின் தோல்வியுற்ற கிளர்ச்சி அவரது கூலிப்படையின் சுதந்திரத்தை தக்க வைத்துக்கொள்ளும் முயற்சி என்று ஆய்வாளர்கள் நம்புகின்றனர். குறிப்பாக ரஷ்ய ராணுவ தலைவர்கள் வாக்னரை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு ஜூலை 1ஆம் தேதி காலக்கெடு விதித்தனர்.

பெலாரூஸ் அதிபர் அலெக்சாண்டர் லிகாஷென்கோ





வால் ஏற்படுத்தப்பட்ட கிளர்ச்சி நிறுத்தம், ப்ரிகோஜின் மீதான கிரிமினல் குற்றச்சாட்டுகளைக் கைவிடுவதற்கு ஈடாக சாமர்த்தியமாக அவருக்கு வாக்னர் படை மீது இப்போது இருக்கும் கட்டுப்பாட்டை நீக்குகிறது.

“இருப்பினும் வாக்னர் படைகள் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் ராணுவ ஒருங்கிணைப்புக்கு சுய விருப்பத்துடன் ஒத்துழைக்குமா அல்லது எதிர்காலத்தில் வாக்னர் குழுவின் பணியாளர்களுடன் ரஷ்ய ராணுவம் இணக்கத்துடன் பணியாற்றுமா என்பது தெளிவாகவில்லை,” என்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.

### வாக்னர் படை கிளர்ச்சியை கைவிட முடிவெடுத்தது ஏன்?

கிளர்ச்சியால் ரஷ்யா முழுவதும் பதற்றம் நிலவிய சூழலில், பெலாரூஸ் அதிபர் தலையிட்டு, புடின் சம்மதத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அதன்விளைவாக, ப்ரிகோஜின் பெலாரூஸ் செல்கிறார். அவரது படை ரஷ்ய ராணுவத்தின் கீழ் செயல்படும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. வாக்னர் மீதான அவரது கட்டுப்பாட்டை சாமர்த்தியமாக ரஷ்யா கைப்பற்றியுள்ளது.

நாள் முழுவதும் நீடித்த பேச்சுவார்த்தையின் விளைவாக, யெவ்ஜெனி ப்ரிகோஜின் சனி இரவு நேரத்தில் வாக்னர் படையின் கிளர்ச்சியை நிறுத்திக்கொள்ள ஒப்புக்கொண்டார்.

புடினின் நெருங்கிய கூட்டாளியான பெலாரூஸின் அதிபர் அலெக்சாண்டர் லுகாஷென்கோ, சனிக்கிழமையன்று ப்ரிகோஜினுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.



அப்போது ஏற்பட்ட ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, ப்ரிகோஜின் பெலாரூஸ் செல்ல அனுமதிக்கப்பட்டார். மேலும், அவர் மீதான அனைத்து குற்றச்சாட்டுகளையும் கைவிடுவதாக ரஷ்யா ஒப்புக்கொண்டது.

புடினின் சம்மதத்துடன் தான் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றதாக லுகாஷென்கோவின் அறிக்கை தெரிவித்துள்ளது.

ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, வாக்னர் குழுவின் தலைவருக்கு எதிரான வழக்கை கைவிட கிரெம்ளின் ஒப்புக்கொண்டது. அதோடு, வாக்னர் படையின் வீரர்களின் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

ப்ரிகோஜின் மற்றும் அவரது படையினருக்கு வேறு என்னவெல்லாம் வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டது என்று இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

வாக்னர் படை கிளர்ச்சியைக் கைவிட ஏன் முடிவெடுத்தது என்று அலசுகிறார், பிபிசியின் கிழக்கு ஐரோப்பாவின் செய்தியாளர் சாரா ரெய்ன்ஸ்ஃபோர்ட். “பணமா? அது ஒருவேளை ப்ரிகோஜினிடம் நிறையவே இருக்கலாம். சனியன்று சோதனையின்போது அவரது வளாகத்தி நிறையவே கண்டுபிடிக்கப்பட்டது.

அப்படியிருக்கும்போது, இனி வரவுள்ள காலகட்டத்தில் அவருடைய பங்கு குறித்த என்ன உத்தரவாதம் அவருக்கு அளிக்கப்பட்டது?

வாக்னர் படையின் தலைவர், அதிபர் புடினுக்கு ஒரு முக்கியமான நபராக, நீண்ட காலமாக அவரது நிழலில் செயல்படுகிறார்.

சிரியாவில் சண்டையிடுவது முதல் உக்ரேனில் 2014 ஆம் ஆண்டு கிரைமியாவை இணைத்தபோது சண்டையிட்டது வரை அதிபர் மாளிகைக்காக அதன் மோசமான வேலைகளைச் செய்து வருகிறார் ப்ரிகோஜின். கூடவே “ட்ரோல் பார்ம்ஸ்” என்றழைக்கப்படும் தவறான தகவலை பரப்புவதில் அவர் ஈடுபட்டுள்ளார்.

கிளர்ச்சியைக் கைவிட்டு பெலாரூஸுக்கு செல்ல, அவருடன் என்ன ஒப்பந்தம் செய்யப்பட்டது. அங்கிருந்து அவர் என்ன செய்யப் போகிறார் எனத் தெரிந்துகொள்வது சுவாரஸ்யமானதாக இருக்கும்.




அவர் அமைதியாக ஓய்வு பெறுவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அதேவேளையில் அவர் அடுத்து என்ன செய்வார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. ப்ரிகோஜிஜ்ன் இருளுக்குள் அமைதியாக மறைந்துவிடும் மனிதர் இல்லை.”

### வாக்னர் கூலிப்படையினர் அடுத்து என்ன செய்வார்கள்?

புடினுக்கு துரோகம் பிடிக்காது. அவர் அதை முற்றிலுமாக வெறுப்பவர். அப்படியிருந்தும் கிளர்ச்சியில் ஈடுபட்ட அனைத்து வாக்னர் துருப்புகளுக்கும் எதிராக குற்றவியல் குற்றச்சாட்டுகள் கைவிடப்படுகின்றன என்று அதிபர் மாளிகை கூறுவதை வெளிப்படையாக நம்புவது மிகவும் கடினம்,” என்று கூறுகிறார் பிபிசி செய்தியாளர் சாரா ரெய்ன்ஸ்ஃபோர்ட்.

இதில் ஒரு முக்கிய வேறுபாடும் உள்ளது. வாக்னர் குழுமம் பாதுகாப்பு அமைச்சகத்தால் கையகப்படுத்தப்பட்டது. வாக்னர் ஒரு கூலிப்படை குழுவாக சுதந்திரமாகச் செயல்படும் நாட்கள் முடிவுக்கு வந்துவிட்டன.

அதன் தலைவர் யெவ்கெனி ப்ரிகோஜின் அமைச்சகத்துடன் நீண்ட காலமாக பகை நீடித்தது. தனது படைகள் பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு செல்லப்படுவதை அவர் எதிர்த்து வந்தார்.

அதுதான் இத்தகைய தீவிர நடவடிக்கை எடுக்க ப்ரிகோஜினை தள்ளியிருக்க வேண்டும் என்கிறார் சாரா ரெய்ன்ஸ்ஃபோர்ட்.

ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, வாக்னர் படையில் இருந்த வீரர்கள் ரஷ்ய ராணுவத்துடன் இணைவார்களா என்பது இன்னும் விடை கிடைக்காத வினாவாக உள்ளது.

புடினை பொறுத்தவரை இது இன்னும் முடியவில்லை. இது தற்காலிகமாகத் தவிர்க்கப்பட்ட ஒரு நெருக்கடி. இதை அவர் இன்னும் முழுமையாகச் சமாளிக்கவில்லை என்றே நினைக்கிறேன்.

### வாக்னர் கிளர்ச்சியை முன்பே கணித்ததா அமெரிக்க உளவுத்துறை

வாக்னர் கிளர்ச்சி பற்றி வெள்ளை மாளிகைக்கு முன்பே தெரிய வந்ததாக அமெரிக்க ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. வாஷிங்டன் போஸ்ட்டிடம் பேசிய அமெரிக்க அதிகாரிகளின் கூற்றுப்படி., ஜூன் மாதத்தின் மத்தியிலேயே யெவ்கெனி ப்ரிகோஜின் ஏதோ திட்டமிட்டுக் கொண்டிருந்ததாக அமெரிக்காவுக்கு தெரிய வந்திருக்க வாய்ப்புள்ளது.

வாக்னர் படையின் தலைவர் ப்ரிகோஜின் நடத்திய கிளர்ச்சியின் நோக்கம் ரஷ்ய அதிபர் மாளிகையான

(10ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் வாழும் போர்த்துகீசிய வம்சாவளி தாய்மொழியை மறந்து தமிழ், சிங்களம் பேசும் சோகம்

இலங்கையை 150 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சி செய்தவர்கள் போர்த்துகீசியவர்கள். இவர்களது பரம்பரையினரான மட்டக்களப்பு 'பரங்கியர்'கள் (**Burgher**), தமது சொந்த மொழியான போர்த்துகீசிய மொழியை இழந்து வருகின்றனர்.

மட்டக்களப்பு பரங்கியர் சமூகத்தில் இந்த மொழியைப் பேசுவோர் தற்போது மிகவும் அரிதாகவே உள்ளார்கள். இவர்களின் இளைய தலைமுறையினர் தங்கள் மூதாதையர் மொழி தெரியாமல் - இப்போது தமிழைப் பேசுகின்றனர்.

"ஆவ்" என்றால் தண்ணீர், 'காச' என்றால் வீடு, "கோக்கு" என்றால் தேங்காய் - என, தமது போர்த்துகீசிய மொழியிலுள்ள சில சொற்களை நமக்கு அறிமுகம் செய்தார் கிரோக்கோரி நிவ்டன் செலர்.


மட்டக்களப்பில் போர்த்துகீசியர் நிர்மாணித்த கோட்டை

இவர் மட்டக்களப்பில் வாழும் பரங்கியர். இலங்கையை ஆட்சிபுரிந்த போர்த்துகீசியரின் வாரிசுகளே மட்டக்களப்பில் 'பரங்கியர்" எனும் அடையாளத்துடன் வாழ்கின்றனர். இலங்கையை 1505ஆம் ஆண்டு போர்த்துகீசியர் கைப்பற்றினர். ஆனாலும் 1628ஆம் ஆண்டுதான் மட்டக்களப்பில் கோட்டை ஒன்றை நிர்மாணித்து, அங்கு போர்த்துகீசியர் தம்மை நிலைநிறுத்திக் கொண்டார்கள்.

**மட்டக்களப்பில் போர்த்துகீசியர் கோட்டை**

மட்டக்களப்பில் போர்த்துகீசியர் நிர்மாணித்த கோட்டையை இப்போதும் காணலாம். கடந்த 1638ஆம் ஆண்டு இந்தக் கோட்டையை ஒல்லாந்தர் கைப்பற்றிக் கொண்டனர். தற்போது 'மட்டக்களப்பு மாவட்ட செயலகம்" இந்தக் கோட்டையில் இயங்கி வருகின்றது.

மட்டக்களப்பில் சுமார் 2 ஆயிரம் பரங்கியர்கள் வாழ்வதாக நிவ்டன் செலர் கூறுகின்றார். இவர் ஓர் இசைக்கலைஞர். 75 வயதாகும் நிவ்டன் செலர் - தனது மூதாதையரான போர்த்துகீசியரின் இசையை இளையோருக்குக் கற்றுக் கொடுக்கின்றார்.

தமது மூதாதையரின் மொழி, கலை, கலாசாரம் மற்றும் தொன்மைகளை பாதுகாப்பதிலும், பரப்புவதிலும் ஆர்வத்துடன் செயல்படும் நிவ்டன் செலர், தமது மூதாதையர் பாவித்த பொருட்களையும் தேடிப் பாதுகாத்து வைத்திருக்கின்றார்.

மட்டக்களப்பிலுள்ள பரங்கியர்கள் தற்போது தமிழை தமக்கான மொழியாக்கிக் கொண்டுள்ளனர். அந்த சமூகத்திலுள்ள இளையோருக்கு போர்த்துகீசிய மொழி பெரும்பாலும் தெரியாது. மூத்தோர் மட்டுமே அந்த மொழியை அறிந்து வைத்துள்ளனர்.

**தாய்மொழியை விட்டு தமிழ் கற்கும் வம்சாவளியினர்**

'நாங்கள் சிறுவர்களாக இருக்கும்போது, வீட்டில் போர்த்துகீசிய மொழியைத்தான் பேசுவோம். தமிழில் பேசினால் எமது தந்தை எங்களைத் திட்டுவார், எங்களின் மொழியைப் பேசுமாறு கூறுவார். அதனால்தான் அந்த மொழியை நான் அறிந்து வைத்திருக்கிறேன்" என்கிறார் 75 வயதான எவ்ரின் செலர். இவர் மட்டக்களப்பு - பனிச்சையடியில் வாழ்கிறார். பரங்கியர் சமூகத்திலுள்ள இளையோர் போர்த்துகீசிய மொழியை அறியாமல் இருக்கின்றமை குறித்து அவர் கவலைப்படுகின்றார்.

மட்டக்களப்பிலுள்ள பரங்கியர்களில் பெரும்பாலானோர் ரோமன் கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றுகின்றனர்.

**கப்றிஞ்ஞா நடனம்**

பரங்கியர்களிடையே, அவர்களின் மொழி மற்றும் கலை, கலாசாரங்கள் அருகி வருகின்ற போதிலும், அவர்களுக்கே உரித்தான கப்றிஞ்ஞா நடனம் - இன்னும் அவர்களிடையே உயிர்ப்புடன் உள்ளது.

போர்த்துகீசியர், இலங்கையை விட்டுச் சென்று 365 வருடங்களாகி விட்ட போதிலும், இலங்கையில் வசித்து வரும் அவர்களின் பரம்பரையினர் போர்த்துகீசியரின் கப்றிஞ்ஞா நடனத்தை இன்னும் பேணி வருகின்றனர்.

பரங்கியர்களின் கப்றிஞ்ஞா நடனம் தனித்துவமானது. திருமண நிகழ்வுகளின்போது மணமகன், மணமகள் மற்றும் அவர்களின் தோழர்கள் இணைந்து இந்த நடனத்தை ஆடுவார்கள். கப்றிஞ்ஞா நடனம் 5 விதங்களைக் கொண்டது என்கிறார் இசைக்கலைஞர் ஸ்டீவன் ஆன்ட்ராடே.

"ஆண்களும் பெண்களுமான 4 ஜோடிகள் சேர்ந்து இந்த நடனத்தை ஆடுவர். கப்றிஞ்ஞா நடனத்திற்கென்று


ஷெரின் டெனாரன்ஸ், ஓய்வு பெற்ற ஆசிரியை


றொக்ஸ்மன் டிலிமா


ஸ்டீவன் ஆன்ட்ராடே

தனித்துவமான இசை மற்றும் பாடல்கள் உள்ளன. அந்தப் பாடல்கள் 'பைலா' என அழைக்கப்படுகின்றன. போர்த்துகீசிய மொழியில்தான் 'பைலா' பாடுவோம்" என, அவர் விவரித்தார்.

சிங்களத்திலும் "பைலா" பாடல்கள் உள்ளன. 'போர்த்துகீசிய பைலா" விலிருந்தே "சிங்கள பைலா" உருவானதாக, நோர்வேயில் வசித்து வரும் இலங்கை எழுத்தாளர் என்.சரவணன் குறிப்பிடுகின்றார். 'சிங்களப் பண்பாட்டிலிருந்து" எனும் தனது நூலில் இது தொடர்பாக அவர் விவரித்து எழுதியுள்ளார்.

கப்றிஞ்ஞா நடனத்தில் முதல் நடனத்திலிருந்து நான்காவது நடனம் வரை இசை மட்டுமே வழங்கப்படும் என்றும், ஐந்தாவது நடனத்தில் இசையுடன் "பைலா" பாடப்படும் எனவும் ஸ்டீவன் ஆன்ட்ராடோ கூறுகின்றார்.

"கப்றிஞ்ஞாவில் தவறிழைப்போர், அதன் பொருட்டு அபராதம் செலுத்த வேண்டும். நடனத்திற்கு இசை வழங்கும் குழுவினருக்கு, தவறிழைத்தோர் அபராதத்தை வழங்குவார்கள். இசைக் கலைஞர்கள் நிலத்தில் ஒரு சீலைத் துண்டை விரித்து, அதன் மேல் தமது இசைக்கருவிகளை வைத்து, தவறிழைத்தவர்களிடம் அபராதம் கேட்பார்கள், தவறுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மது பாட்டில்கள் அபராதமாக வழங்கப்படும்" என்கிறார் ஸ்டீவன் ஆன்ட்ராடோ.

பரங்கியர்கள் தமது மூதாதையரின் மொழி, மற்றும் ஏராளமான கலை, கலாசாரங்களை இழந்து வருகின்ற


தச்சுத் தொழிலில் போர்த்துகீசிய வம்சாவளியினர்

போதிலும், கப்றிஞ்ஞா நடனத்தை அந்த சமூகத்திலுள்ள சிறுவர்கள்கூட தெரிந்து வைத்திருக்கின்றமை ஆச்சரியமளிக்கின்றது.

ஆனாலும், கப்றிஞ்ஞா நடனத்திற்கான இசை மற்றும் பைலா ஆகியவற்றை வழங்கக்கூடிய கலைஞர்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர்.

பரங்கியர்களில் பெண்கள் முழங்கால் வரையான சட்டையும் ஆண்கள் சேர்ட் மற்றும் டவுசரும் அணிவார்கள். ஆனால் 22 வயது வரையும் ஆண்கள் அரைக்கால் டவுசரே (களிசான்) அணிவார்கள் என்கிறார் மட்டக்களப்பிலுள்ள ஓய்வு பெற்ற ஆசிரியை ஷெரின் டெனாரன்ஸ். இதுவே தமது ஆடைக் கலாசாரம் எனவும் அவர் கூறினார். ஆனால் இப்போது அரைக்கால் டவுசர்களை இளைஞர்கள் அணிவதில்லை.

தான் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் சட்டை அணிந்து கொண்டே கடமைக்குச் சென்றதாக ஷெரின் டெனாரன்ஸ் கூறினார். 1992ஆம் ஆண்டு இவருக்கு ஆசிரியர் நியமனம் கிடைத்தது. இப்போது 62 வயதாகிறது. கடமை நேரத்தில் சட்டை அணிவதற்கு ஆசிரியர்கள் அனுமதிக்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

"எனக்கு நியமனம் கிடைத்தபோது, சட்டை அணிந்தே பணிக்குச் செல்வேன் என்று அதிகாரிகளிடம் கூறினேன். காரணம் புடவை (**Saree**) அணிந்து எனக்குப் பழக்கமில்லை. எனது கோரிக்கையை அதிகாரிகள் ஏற்றுக் கொண்டனர்," என்கிறார் ஓய்வுபெற்ற ஆசிரியை ஷெரின்.

சட்டையுடன் கடமைக்குச் சென்றபோது - தனக்கு எதிர்ப்புகள் இருக்கவில்லை என்றும், ஆனால் 'புடவை அணிந்துகொண்டு பணிக்கு வந்தால் நலம்தானே" என சில ஆசிரியர்கள் தன்னைக் கேட்டுக் கொண்டதாகவும் அவர் கூறினார்.

"சட்டை போட்ட டீச்சர் என்று பாடசாலையில் எனக்கு இன்னொரு பெயர் இருந்தது. அதற்காக நான் வருந்தவில்லை, அதை அவமானமாகவும் கருதவில்லை" என்று கூறும் அவர், புடவைவையை ஒருபோதும் தான் நிராகரிக்கவில்லை என்கிறார்.

எனினும் தமது கலாசார ஆடையான சட்டையை, தன்னுடைய பணிக்காலம் முழுவதும் அணிந்து சென்றவர் என்கிற அடையாளமும் மதிப்பும் ஷெரின் டீச்சருக்கு மட்டக்களப்பு பரங்கியர் மத்தியில் உள்ளது.

**இன்னும் தொடரும் குடும்பப் பெயர்கள்**

பரங்கியர்கள் தமது பெயருக்குப் பின்னால் தங்களுடைய குடும்பப் பெயரையும் சேர்த்தே கூறுவர். அவை வித்தியாசமானவை, புழக்கமற்றவை. செலர், அவுட்ஸ்கோன், பாத்லட், பெலிசிற்றா, பல்த்தசார், பம்பெக், ஸ்தொக்வஸ், லப்பான் போன்றவை பயங்கியர்களின் குடும்பப் பெயர்களில் சிலவாகும்.

பரங்கியர் பயன்படுத்தும் போர்த்துகீசிய சொற்கள், தமிழ் மற்றும் சிங்கள மொழிகளிலும் அதே அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக தமிழில் பயன்படுத்தப்படும் குசினி, கக்கூஸ், அலுமாரி போன்றவை போர்த்துகீசிய சொற்கள்.

அதேபோன்று 'ஸ்பிரிதாலய' (வைத்தியசாலை) மற்றும் 'கசாத' (திருமணம்) போன்ற சிங்களச் சொற்களும் போர்த்துகீசிய மொழியில் அதே அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

தச்சு, தையல் போன்ற தொழில்களில் பரங்கியர்கள் பிரசித்தமானவர்கள். முன்னர் துப்பாக்கி தயாரிக்கும் தொழிலிலும் பரங்கியர்கள் சிறந்து விளங்கியதாகக் கூறுகின்றார் கொட்பிரி ஜோன்சன். 72 வயதான இவர், இப்போதும் தச்சு தொழிலைச் செய்து வருகின்றார்.

**போர்த்துகீசியர் திருமணச் சடங்குகள்**

பரங்கியர்கள் அநேகமாக தமது சமூகத்துக்குள்ளேயே திருமணம் செய்து கொள்வார்கள். அதைத் தாண்டி - பரங்கியர் சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் - வேறு சமூகத்து ஆண்களைத் திருமணம் செய்துகொண்டால், அதன் பிறகு குறித்த பெண்கள் பரங்கியராகக் கருதப்படமாட்டார்கள்.

அவர்கள் திருமணத்துக்கு முன்னர் பங்கேற்ற பரங்கியர் சமூகத்தின் சடங்குகள் மற்றும் கலாசாரங்கள் போன்றவற்றில் கலந்து கொள்வதற்கு அனுமதி இல்லை.

ஆனால், பரங்கியர் சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள், வேறு சமூகத்துப் பெண்களைத் திருமணம் செய்து கொள்வதில் பிரச்னையில்லை. பரங்கி ஆண்கள் திருமணம் முடிக்கும் ஏனைய சமூகத்துப் பெண்களும், பரங்கியராகவே கருதப்படுவர்.

பரங்கியர் திருமணத்தில் "மாப்பிள்ளைச் சாப்பாடு" என்கிற பாரம்பரியம் விஷேசமானது என்றும், ஆனால் அது தற்போது வழக்கொழிந்து விட்டதாகவும் கூறுகின்றார் றொக்ஸ்மன் டிலிமா. இவர் மட்டக்களப்பு 'பரங்கியர் கலாசார ஒன்றியத்தின்" பொறுப்பாளர்களில் ஒருவராகச் செயற்பட்டு வருகின்றார்.

திருமணம் முடிந்து மறுநாள் "மாப்பிள்ளை சாப்பாடு" வழங்கப்படும். சாப்பாட்டுக்கான இறைச்சி மற்றும் சமையலுக்கான விறகு ஆகியவற்றை மாப்பிள்ளை தரப்பு வழங்கும்.

சமையலுக்குரிய ஏனைய பொருட்கள் அனைத்தையும் பெண் வீட்டார் வழங்குவார்கள். மாப்பிள்ளை வீட்டார்தான் உணவைச் சமைப்பார்கள்" என்கிறார் றொக்ஸ்மன். பரங்கியர்களின் உணவில் பன்றி இறைச்சி பிரதானமானது.

இவ்வாறு தமது சமூகம் இழந்து வரும் மொழி, கலை மற்றும் கலாசாரங்களைப் பாதுகாக்கும் ஆர்வத்துடன், பரங்கியர் சமூகத்தினுள் இயங்கும் அமைப்புகள் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

போர்த்துகீசிய மொழி, கப்றிஞ்ஞா நடனத்திற்கான இசை மற்றும் பைலா ஆகியவற்றைக் கற்றுக் கொடுக்கும் வகுப்புகளைத் தமது மட்டக்களப்பு "பரங்கியர் கலாசார ஒன்றியம்" நடத்தி வருவதாக றொக்ஸ்மன் கூறுகின்றார்.

ஆனாலும் மட்டக்களப்பு பரங்கியர் சமூகம், தமது மொழியை முற்று முழுதாகவே இழந்து விடலாம் என்கிற அச்சமும் கவலையும், அந்த சமூகத்தின் மூத்தோரிடம் நிறையவே உள்ளன. ●

# பத்மநாபாவின் முடிவை ஏற்றிருந்தால் முள்ளிவாய்க்கால் அழிவு நேர்ந்திராது!



## சிவசக்தி ஆனந்தன் சொல்கிறார்

நிந்தவூர், ஜுன் 27

"மறைந்த நம் தோழர் பத்மநாபா அன்று இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்று தீர்க்கதரிசனமாக எடுத்த முடிவை ஏற்றிருந்தால் எமது மக்களுக்கு ஏற்பட்ட முள்ளிவாய்க்கால் பேரழிவைக்கூட தடுத்திருக்கலாம், சமஷ்டியை அடையும் தூரத்துக்குக்கூட வந்திருக்க முடியும்" - இவ்வாறு முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கூறினார்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 33ஆவது தியாகிகள் தின பிரதான நிகழ்வு காரைதீவில் நடைபெற்றது. இதில், பங்கேற்று உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தோழர் பத்ம நாபா தமிழ் மக்களின் விடிவுக்காக தமது 39 ஆவது வயதிலேயே எமது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எனும் பேரியக்கத்தைக் கட்டியெழுப்பினார்.

இதன் மூலம் தமிழ் மக்களின் எதிர்கால நலனுக்காக தீர்க்க தரிசனமான முடிவுகளை எடுத்தார். அவரது இழப்பு தமிழினத்துக்குப் பேரிழப்பாகும். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்படியான 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மூலம் கிடைத்த இணைந்த வடகிழக்கு மாகாண சபையை அவர் தீர்க்க தரிசனமாக ஏற்றுக்கொண்டார்.

ஆனால், நமது மிதவாத தலைவர்களும், ஆயுதக்குழுக்களும் இந்த தீர்க்க தரிசனமான முடிவுக்கு ஆதரவு வழங்கவில்லை. அவ்வாறு அன்று அவரது முடிவை ஏற்றிருந்தால் எம் மக்கள் கண்ட முள்ளிவாய்க்கால் பேரழிவையே தடுத்திருக்கலாம் சமஷ்டியை அடையும் தூரத்திற்கும் வந்திருக்க முடியும்.

எனினும், இன்று ஆயுதப் போராட்டத்தோடு சம்பந்தப்பட்ட ஐந்து கட்சிகள் ஒருங்கிணைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு இறுக்கமான - பலமான - பட்டறிவுடன் அரசியல் தீர்வு தொடர்பில் புதிய பாதையில் பயணித்து வருகின்றது.

நமது தியாகிகள் கொண்ட இலட்சியங்களை அடைவதற்கு நிரந்தரமானதும் கௌரவமானதுமான அரசியல் தீர்வை நோக்கிய எம் பயணம் தொடரும்" மேலும், நாட்டில் இன்று பல்வேறு பிரச்னைகளும் பூதாகரமாக வெளிக்கிளப்பிய வண்ணமுள்ளன. நாட்டில் ஊடக சுதந்திரத்திற்கு ஆப்பு வைத்து, ஊடகங்களின் கழுத்தை நெரிக்கும் சட்டத்தைக் கொண்டு வர அரசு துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறது.

உதவித்திட்டகொடுப்பனவில் ஏற்பட்டுள்ள முறைகேடுகள் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான நிலமைகள் தொடரும் பட்சத்தில், மீண்டும் அரகலய போன்ற போராட்டங்கள் வெடிக்கும் சாத்தியங்களே உள்ளன." - என்றார். (ஐ-06)

# புடின் பலவீனம் அடைகிறாரா?...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிரெம்ளினை, அது எதிர்பார்க்காத நேரத்தில் கைப்பற்றுவதுதான் எனத் தோன்றினாலும், அமெரிக்க உளவு அமைப்புகள் அவர் இப்படி ஏதோவொன்றைச் செய்யத் திட்டமிட்டுக் கொண்டிருந்ததற்கான அறிகுறிகளை ஏற்கெனவே அறிந்திருந்தன என்றும் இந்த வாரத் தொடக்கத்தில் முக்கிய காங்கிரஸ் தலைவர்களுடன் அதிபர் பைடனுக்கு இது பற்றித் தெரிவிக்கப்பட்டதாகவும் அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அப்படி திட்டமிடுவதற்கான ஒரு முக்கியத் தூண்டுதலாக ஜுன் 10 ஆம் தேதியன்று ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் வாக்னர் குழுவை போன்ற அனைத்து தன்னார்வ படைப் பிரிவினருக்கும், அரசாங்கத்துடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திடுமாறு உத்தரவிடப்பட்டது. இது ப்ரிகோஜினின் வாக்னர் கூலிப்படை துருப்புகளை சாமர்த்தியமாகக் கையகப்படுத்தும் முயற்சி.

"ஏதோ நடக்கப் போவதாக, தலைமைக்குத் தெரிவிப்பதற்கு ஏற்ற அளவு போதுமான சமிக்ஞைகள் இருந்தன..." என்று அதிகாரிகள் வாஷிங்டன் போஸ்ட்டிடம் தெரிவித்தனர். ஆனால், கிளர்ச்சி தொடங்குவதற்கு சற்று முன்பு வரை ப்ரிகோஜினின் திட்டங்களுடைய சரியான தன்மை என்னவென்று தெளிவாகத் தெரியவில்லை.

ரஷ்ய அதிபர் விளாதிமிர் புடினுக்கும் ப்ரிகோஜின் ஏதோ சதி செய்கிறார் என்று அவரது சொந்த உளவுத்துறையே கூறியதாக அந்தப் பத்திரிகை செய்தி கூறுகிறது.

இது அவரிடம் எப்போது தெரியப்படுத்தப்பட்டது என்பது துல்லியமாகத் தெரியவில்லை. ஆனால், அது "நிச்சயமாக 24 மணிநேரத்திற்கு முன்பு" என்று சனிக்கிழமையன்று அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறியதாக அந்த நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

கூலிப்படையின் தலைவர் ரஷ்யாவுடன் எல்லைக்கு அருகே ஆயுதங்கள், வெடிமருந்துகள் மற்றும் பிற ஆயுதங்களைக் குவித்து வைத்திருப்பதை அமெரிக்க உளவுத்துறை கண்டறிந்ததாக சிஎன்என் செய்தி வெளியிட்டுள்ளது.

ப்ரிகோஜினுக்கும் ரஷ்ய பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் இடையிலான உறவு மோசமடைந்து வருவதை அமெரிக்க உளவுத்துறை தலைவர்கள் பல மாதங்களாகக் கண்காணித்து வந்தனர். மேலும் உக்ரேன் போர், வாக்னர் படைப்பிரிவு, ரஷ்ய ராணுவம் என இரு தரப்புக்குமே மோசமான விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பதற்கான அறிகுறியாக இது இருக்கலாம் என்று உளவுத்துறை முடிவு செய்துள்ளதாக சி.என்.என் கூறுகிறது.

**வெள்ளை மாளிகை என்ன சொல்கிறது?**

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் ரஷ்யாவில் நடக்கும் நிகழ்வுகள் குறித்து இதுவரை மௌனம் காத்து வந்தார்.

அதிபர் ஜோ பைடன், துணை அதிபர் கமலா ஹாரிஸ் ஆகியோருக்கு மூத்த தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் நாள் முழுவதும் விளக்கமளிக்கப்படுவதாக வெள்ளை மாளிகை சனியன்று கூறியது.

ஜோ பைடன் உயர்மட்ட ஆலோசகர்களுடன் ஆலோசனை நடத்தியதாகவும், பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனியின் தலைவர்களுடனும் பேசியதாகவும் எங்களிடம் கூறப்பட்டது.

உயர்மட்ட பாதுகாப்பு ஆலோசகர்களுடனான காணொளி கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக அவர் திட்டமிட்டிருந்த பயணத்தைத் தாமதப்படுத்தியதாக அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்தன.

ரஷ்யாவின் நிலைமையைக் கண்காணிப்பதற்காக கூடுதல் படைத் தலைவர் ஜெனரல் மார்க் ஏ மில்லி தனது அலுவல்பூர்வ பயணத்தை ரத்து செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.








# அரசின் நலன்புரி உதவிகளில் தகுதி இருந்தும் புறக்கணிப்பு!

## மூதூரில் பொதுமக்கள் கவனவீர்ப்பு போராட்டம்

திருமலை, ஜூன் 27

**மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் அரசாங்கத்தின் நலன்புரி உதவித் திட்டத்தில் தகுதி இருந்தும் தெரிவு செய்யப்படாது பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மூதூர் பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்று திங்கட்கிழமை காலை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.**

கவனவீர்ப்பில் ஈடுபட்டோர் பிரதேச செயலக கதவைத் திறந்து பிரதேச செயலக வளாகத்தில் நுழைந்து அங்கும் சத்தமிட்டு ஆர்ப்பாட் டம் செய்தனர்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்றோம். விதவைகளாக இருக்கின்றோம். அன்றாட கூலி வேலை செய்து சாப்பிடுவதற்கு கூட கஷ்டப்படுகின்றோம். தற்போது மின்சார கட்டணம் அதிகரிப்பு உள்ளிட்ட அத்தியவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு உள்ளிட்டவற்றால் கஷ்டப்படும் நமக்கு

அரசாங்கமும், அதிகாரிகளும் தீங்கிழைத்துள்ளனர் என ஆவேசத்துடனும், கவலையுடனும் அவர்கள் கருத்து தெரிவித்தனர். (அ)

# தேங்காய் பறித்துத் தருவதாக சிறுமியை ஏமாற்றி பாலியல் துஷ்பிரயோக முயற்சி!

## முதியவர் பொலிஸாரால் கைது

அம்பாறை, ஜூன் 27

வீட்டின் வளவில் விளையாடி கொண்டிருந்த சிறுமியை ஏமாற்றி அழைத்து சென்று அங்க சேட்டை செய்த முதியவரை கல்முனை தலைமையக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமைய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இதன்போது தனது வீட்டு வளவில் விளையாடிக்கொண்டிருந்த சுமார் 8 வயதுடைய சிறுமியை அவ்வழியால் மாடு மேய்த்து கொண்டிருந்த 64 வயது மதிக்கதக்க முதியவர் தேங்காய் பறித்து தருவதாக கூறி அழைத்துச் சென்று அச்சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயற்சித்துள்ளதாக சிறுமியின் உறவினரால் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைய சந்தேக நபரான முதியவர் கைது செய்யப்பட்டார். (அ)

# போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வுப் பேரணி



மட்டக்களப்பு, ஜூன் 27

காத்தான்குடியில் நேற்றுத் திங்கட்கிழமை போதை ஒழிப்பு ஊர்வலமொன்று இடம்பெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலகம், காத்தான்குடி பிரதேச செயலக கலாசார பிரிவு என்பன இணைந்து காத்தான்குடி பிரதேச செயலாளர் உதய சிறீதர் தலைமையில் இந்த விழிப்புணர்வு ஊர்வலம் இடம்பெற்றது.

பாடசாலை மாணவர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் இதில் பங்கேற்றனர்.

# காத்தான்குடியில் பேரீச்சை அறுவடை

## ஆளுநர் ஆரம்பித்து வைத்தார்



மட்டக்களப்பு, ஜூன் 27

பெரிய காத்தான்குடியில் அழகுபடுத்தும் நோக்கில் நடப்பட்ட பேரீச்சம்பழ இவ்வருட அறுவடை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானினால் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதலாவது அறுவடையை காத்தான்குடி நகரசபை செயலாளரிடம் இருந்து ஆளுநர் பெற்றுக் கொண்டார்.

இறைவனின் அருளால் விளைச்சல் சிறப்பாக உள்ளதாகவும், அவற்றை பள்ளிவாசல்களுக்கு விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநர் அங்கு தெரிவித்தார். (அ)

# சம்மாந்துறை அல்ஹம்றாவில் செயல்பாட்டறை திறப்பு விழா



காரைதீவு, ஜூன் 27

சம்மாந்துறை அல் ஹம்றா வித்தியாலயத்தில் செயல்பாட்டறை திறப்பு விழாவும், வகுப்பறை அலங்காரப் போட்டியும், பரிசு வழங்கல் நிகழ்வும் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா கலந்து கொண்டு வகுப்பறை அலங்காரப் போட்டியில் வெற்றி பெற்ற ஆசிரியர்களுக்கு பரிசில் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் முதலாம் இடத்தை செயல்பாட்டறையும் 2ஆம் இடத்தை தரம் 1 வகுப்பறையும், 3ஆம் இடத்தை தரம் 3 வகுப்பறையும்தட்டிக்கொண்டன.

மேலும் இந்நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி நிதர்சினி. மகேந்திரகுமார், ஏ.எல்.ஏ. மஜீட், திருமதி ஏ.சி. நுஸ்ரத் நிலோபறா, சம்மாந்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.எம். ஜனோபர், அதிபர்களான ஏ.முகம்மட் றிஸ்வான், எம்மிஎம்.சாபிர், யூ.எல் லாபிர், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ. நஸீர், வலுவூட்டப்பட்ட பாடசாலை மேம்பாட்டுத் திட்ட இணைப்பாளர் ஏ. யூசுப், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு செயலாளர் ஏ.எம்.பைறோஜ், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து சிறப்பித்தனர். (அ)



எண்ணம்போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் அனுசரணையில் கவியருவி ஈச்சிலம்பற்று ப.மதிபாலசிங்கத்தின் 'எனக்கொரு வரம் வேண்டும்' கன்னிக் கவி நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை மூதூர் - மல்லிகைத்தீவு மகா வித்தியாலயத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் வெளியீட்டு வைக்கப்பட்டது. (அ)

# மாவடியில் பெருந்திரளான பக்தர்கள் நேற்று எண்ணெய்க் காப்பு சாத்தினர்



காரைதீவு, ஜூன் 27

காரைதீவு மாவடி கந்தசுவாமி ஆலயத்தின் கும்பாபிஷேகத்தின் முதல் நிகழ்வான எண்ணெய்க் காப்பு சாத்தும்கிரியை நிகழ்வுகள் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

காலையில் இருந்தே பெருந்திரளான பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துவதற்காக நீண்ட வரிசையில் நின்றனர்.

கடந்த சனிக்கிழமை விசேட கர்மாரம்ப கிரியைகளுடன் கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பமானது.

நேற்று திங்கட்கிழமையும், இன்று செவ்வாய்க்கிழமையும் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறும் என ஆலய பரிபாலன சபை செயலாளர் சின்னத்தம்பி சிவகுமார் தெரிவித்தார். (அ)

ஈழநாடு



# பைடனுடன் ஜெலன்ஸ்கி நேற்று முக்கிய பேச்சு!

## வாக்னர் கூலிப்படை விடயம் குறித்து

கீவ், ஜூன் 27

**எவ்ஜெனி ப்ரிகோஜின் தலைமையிலான வாக்னர் கூலிப்படை ரஷ்யாவுக்கு எதிராக திரும்பிய பரபரப்பான சூழலில் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.**



இந்நிலையில், வாக்னர் கூலிப்படை ரஷ்யாவுக்கு எதிராக திரும்பியதுடன், ரஷ்யாவின் ரோஸ்டோவ் ஆன் டான் இராணுவ கட்டுப்பட்டு மையத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகவும் அத்துடன் மொஸ்கோ நோக்கி முன்னோக்கிச் செல்வதற்கு உள்ளதாகவும் அறிவித்தது.

இதனால் ரஷ்யா பெரும் இக்கட்டான சூழ்நிலையில் சிக்கியது. அதாவது, ஒரு பக்கம் உக்ரைனுக்கு எதிராக போராடுவதுதான், மறுபுறம் வாக்னர் படையை ஒடுக்கவேண்டிய சூழல் எழுந்தது.

இந்நிலையில், அதிபர் புடின் வாக்னர் படை வீரர்களை கண்டதும் சுடுமாறு உத்தரவிட்டார். இந்த நிலையில்தான் ரஷ்யாவின் மிகநெருங்கிய நாடான பெலாரஸ் மத்தியஸ்தராக செயற்பட்டு, ப்ரிகோஜினிடம் பேச்சு நடத்தியது.

அதன் பொழுது, ப்ரிகோஜின் பெலாரஸ் செல்ல வேண்டும் எனவும் வாக்னர் படை மீதான கிரிமினல் வழக்குகளை ரஷ்யா திரும்ப பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதையடுத்து, வாக்னர் படை மொஸ்கோ நோக்கி செல்வதிலிருந்து பின்வாங்கியது.

இவ்வாறான சூழலில், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இது தொடர்பாக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி, நான் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உடன் பேசினேன். நேர்மறை மற்றும் உத்வேகம் அளிக்கும் உரையாடல் நடைபெற்றது.

உக்ரைன் - ரஷ்யா இடையிலான போர் மற்றும் தற்போது ரஷ்யாவில் நடைபெற்று வரும் சூழ்நிலை குறித்தும் விவாதித்தோம். சர்வதேச உத்தரவு நடைமுறைக்கு வரும்வரை, சர்வதேச நாடுகள் ரஷ்யாவுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டதாகவும் தெரிவித்தார்.

மேலும், நீண்ட தூரம் சென்று தாக்கும் ஆயுதங்களை வழங்குவது குறித்து ஜெலன்ஸ்கி மற்றும் பைடன் உடன் ஆலோசனை நடத்தியதை உறுதிப்படுத்திய வெள்ளை மாளிகை, இது தனிப்பட்ட விடயம் என்றும் தெரிவித்துள்ளது. (அ)

# கிரீஸ் நாட்டில் மீண்டும் பிரதமராகும் கிரியாகோஸ்



எதென்ஸ், ஜூன் 27

ஐரோப்பிய நாடான கிரீஸில் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவரான கிரியாகோஸ் மிட்சோடாகிஸ் மீண்டும் பிரதமராக தெரிவாகியுள்ளார்.

இவர் கடந்த 4 ஆண்டுகளாக பிரதமராக பதவி வகித்து வருகிறார். இவரது ஆட்சியின் மீது மக்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர்.

இதனையடுத்து கடந்த மே 21 ஆம் திகதி தேர்தல் இடம்பெற்றது.

தேர்தலில் வெற்றி பெற 300 தொகுதிகளை கொண்ட அந்த நாட்டில் 151 இடங்களை பெற வேண்டும். ஆனால் எந்தவொரு கட்சியும் பெரும்பான்மையினை பெறவில்லை. இதனால் கடந்த 5 வாரங்களில் இரண்டாவது முறையாக அங்கு பொதுத்தேர்தல் நடைபெற்றது.

இந்த தேர்தலில் ஆளும் புதிய ஜனநாயக கட்சி அறுதிப் பெரும்பான்மை வெற்றியைப் பெற்று மீண்டும் ஆட்சியை பிடித்துள்ளது.

மொத்தமாக 300 இடங்களில் 158 இடங்களை கைப்பற்றியுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வட மேற்கு சிரியாவில் கடும் வான் தாக்குதல்!

## 13 பேர் உயிரிழப்பு



டமஸ்கஸ், ஜூன் 27

வட மேற்கு சிரியாவில் சந்தையொன்றில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட வான் தாக்குதலில் இரண்டு குழந்தைகள் உட்பட 13 பேர் உயிரிழந்தனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி, ஜிஸர் அல் ஷுகுர் பிரதேசத்தில் காணப்படும் சந்தையொன்றின் மீது இந்த வான் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த தாக்குதலில் 30 இற்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வரும் நிலையில் அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்புகள் அதிகரிக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பிராந்தியத்திலுள்ள கிளர்ச்சிப் படையினரால் நடத்தப்பட்ட ஆளற்ற விமானத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சிரியாவில் அரச படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடந்த ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டு போர் நடந்து வருகிறது.

இந்த போரில் சிரிய ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு ரஷ்யா உதவி வருகிறது.

உயிரிழந்தவர்களுள் மூன்று கிளர்ச்சிப் படையினரும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது இந்த ஆண்டின் மிக மோசமான தாக்குதல் என செய்திகள் வெளியாகி வருகின்றன. (அ)

# ரஷ்யாவின் நிலைமை குறித்து கவலையடைகிறார் ரிஷி சுனக்



லண்டன், ஜூன் 27

ரஷ்யாவின் நிலை குறித்து தான் கவலையடைவதாகவும், ரஷ்ய மக்களை பாதுகாக்க வேண்டும் எனவும் பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக் தெரிவித்துள்ளார்.

இது வரை காலமும் ரஷ்யாவுக்கு ஆதரவாக இருந்து வந்த வாக்னர் குழுவினர் திடீரென அந்நாட்டுக்கு எதிராகத் திரும்பியதையடுத்து ரஷ்யாவில் பேர் பதற்றம் ஏற்பட்டது.

இதன் காரணமாக முக்கிய பகுதிகளில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் ரஷ்யாவின் நிலை குறித்து தான் கவலையடைவதாகத் தெரிவித்துள்ள பிரதமர் ரிஷி சுனக் "அனைத்து தரப்பினரும் பொறுப்புடன் இருக்கவேண்டும் எனவும் பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டும் எனவும் கூறினார்.

அத்துடன் அமெரிக்க ஜனாதிபதி பைடன், பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் மற்றும் ஜேர்மன் ஜனாதிபதி ஷோல்ஸ் ஆகியோரிடமும் இது குறித்து பேசியுள்ளதாகவும் ரஷ்யாவின் நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக போர் இடம்பெற்று வரும் நிலையில் பிரிட்டன் உக்ரைனுக்கு தனது ஆதரவினை வழங்கி வந்தது. இந்நிலையில் ரிஷி சுனக், ரஷ்ய மக்களுக்காக தமது கவலையை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உக்ரைனுக்கு மீண்டும் உதவி வழங்குகிறது அவுஸ்திரேலியா

கான்பரா, ஜூன் 27

ரஷ்ய- உக்ரைன் போரில் உக்ரைனுக்கு உதவி வரும் நாடுகளில் ஒன்றாக தற்போது நேட்டோ அமைப்பில் சேராத அவுஸ்திரேலியா இருந்து வருகிறது. அது மீண்டும் உக்ரைனுக்கு உதவி வழங்கியுள்ளது.

அந்த நாடு சமீபத்திய உதவியாக, உக்ரைனுக்கு கூடுதலாக 70 இராணுவ வாகனங்களை வழங்கியது.

110 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்கள் தொகுப்பை உதவியாக அறிவித்த ஜனாதிபதி அந்தோனி அல்பானிஸ்-

இந்த உதவி, ரஷ்யாவில் சென்ற வார இறுதியில் நடந்த உள்நாட்டு இராணுவ குழப்பத்துக்கு முன்பே பரிசீலனையில் இருந்தது.

இதன் மூலம் 28 "எம்113" கவச வாகனங்கள், 14 சிறப்பு நடவடிக்கை வாகனங்கள், 28 நடுத்தர டிரக்குகள், 14 டிரெய்லர்கள் மற்றும் 105 மி.மீற்றர் பீரங்கி வெடிபொருட்கள் வழங்கப்படும்.

எனினும், கீவ் கோரிய ஹாகெய் இலகு ரக கவச ரோந்து வாகனங்களோ அல்லது புஷ்மாஸ்டர் காலாட்படை வாகனங்களோ இதில் இடம் பெறவில்லை. அவுஸ்திரேலியா வழங்கும் உதவி குறித்து அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ரிச்சர்ட் மார்ல்ஸ் தெரிவிக்கையில்-

இது ஒரு நீடித்த மோதலாக இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். எனவே நாங்கள் உக்ரைனுடன் எவ்வளவு காலம் தேவைப்படுகிறதோ அவ்வளவு காலம் துணை நிற்போம்- என்றார்.

அவுஸ்திரேலியாவின் பொருளுதவியின் மதிப்பு இதனுடன் 790 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்களாக உயர்கிறது. இவையல்லாது, போரினால் பாதிக்கப்பட்ட உக்ரைனிய மக்களுக்கு உதவும் வகையில் ஐ.நா. சபை தலைமையில் சேகரிக்கப்படும் நிதிக்கு 10 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர் நிதியுதவியும் வழங்குகிறது.

மேலும் அவுஸ்திரேலியா, உக்ரைன் நாட்டுக்கு உதவும் வகையில் மேலும் 12 மாதங்களுக்கு அங்கிருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு சுங்க வரி விலக்கு அளிக்கவிருக்கிறது. (அ)

# உலகக் கிண்ண தகுதி; சுப்பர் 6இல் இலங்கை




*புலவாயோ, ஜூன் 27*

*அயர்லாந்து அணியை 133 ஓட்டங்களால் வெற்றிகொண்ட இலங்கை அணி சுப்பர் 6 சுற்றுக்கு தகுதி பெற்றது.*

*நேற்று முன்தினம் சிம்பாவேயின் புலவாயோவில் நடந்த இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 49.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 325 ஓட்டங்களைக் குவித்தது.*

*இந்தப் போட்டியில் தனது 40ஆவது ஒருநாள் போட்டியில் விளையாடிய திமுத் கருணாரட்ன தனது முதல் சதத்தைப் பூர்த்தி செய்தார். இதற்கு முன்னர் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அவரின் அதிகபட்ச எண்ணிக்கை 97 ஓட்டங்களாகும்.*

*இந்தப் போட்டியில் இலங்கையின் ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. பதும் நிஷங்க (20), குசல் மெண்டிஸ் (0) ஆகிய இருவரும் ஆட்டமிழந்தனர். அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 8.4 ஓவர்களில் 48 ஓட்டங்களாக இருந்தது.*

*எனினும், திமுத் கருணாரட்ன, சதீர சமரவிக்ரம ஆகிய இருவரும் 3ஆவது விக்கெட்டில் 168 ஓட்டங்களைப் பகிர்ந்து இலங்கை அணியை பலமான நிலையில் இட்டனர்.*

*சதீர சமரவிக்ரம 86 பந்துகளில் 4 பௌண்ட்ரிகளுடன் 82 ஓட்டங்களைப் பெற்றார். மறுபக்கத்தில் தனது 5ஆவது தொடர்ச்சியான அரைச் சதத்தைப் பூர்த்தி செய்த திமுத் கருணாரட்ன மிகத் திறமையாக ஆடி அதனை சதமாக மாற்றினார். 103 பந்துகளை எதிர்கொண்ட திமுத் கருணாரட்ன 8 பௌண்ட்ரிகளுடன் 103 ஓட்டங்களைப் பெற்றார்.*

*மத்திய வரிசையில் திறமையாகத் துடுப்பெடுத்தாடிய தனஞ்சய டி சில்வா ஆட்டம் இழக்காமல் 42 ஓட்டங்களையும் சரித் அசலங்க 38 ஓட்டங்களையும் பெற்றனர்.*

*அயர்லாந்தின் பந்து வீச்சில் மார்க் அடயார் 4 விக்கெட்களையும் பெறி மெக்கார்த்தி 3 விக்கெட்களையும் கெரத் டிலேனி 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.*

*பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து 31 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 192 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வி அடைந்தது.*

*அயர்லாந்து துடுப்பாட்டத்தில் கேர்ட்டிஸ் கெம்பர் (39), ஹெரி டெக்டர் (33), ஜோர்ஜ் டொக்ரெல் (26), ஜொஷ் லிட்டல் (20) ஆகிய நால்வரே 20 அல்லது அதற்கு மேற்பட்ட ஓட்டங்களைப் பெற்றனர்.*

*பந்துவீச்சில் வனிந்து ஹசரங்க 5 விக்கெட்களையும் மஹீஷ் தீக்ஷன 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.*



# உலகக்கிண்ண தகுதி ஸ்கொட்லாந்து வெற்றி

*புலவாயோ, ஜூன் 27*

*ஸ்கொட்லாந்து அணியிடம் 76 ஓட்டங்களால் தோல்வியடைந்தது ஓமன் அணி.*

*நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் ஸ்கொட்லாந்து, ஓமன் அணிகள் மோதின.*

*முதலில் விளையாடிய ஸ்கொட்லாந்து அணி 50 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 320 ஓட்டங்கள் குவித்தது. அந்த அணியின் பிரண்டன் மெக்முல்லன் 136 ஓட்டங்களைக் குவித்தார்.*

*அணித்தலைவர் பெரிங்டன் 60, மேத்யூ கிராஸ் 27, தாமஸ் மெக்கின்டோஷ் 32, மார்க் வாட் 25 ஓட்டங்கள் சேர்த்தனர். ஓமன் அணியின் பிலால் கான் 5 விக்கெட்களையும், பயாஸ் பட் 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.*

*பின்னர் விளையாடிய ஓமன் 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 244 ஓட்டங்கள் எடுத்து 76 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.*

*அந்த அணியில் அதிகபட்சமாக விக்கெட் காப்பாளர் நசீம் குஷி 69 ஓட்டங்களை சேர்த்தார். ஷோயிப் கான் 36, அயான் கான் 30, ஆகிப் இல்யாஸ் 31 ஓட்டங்கள் சேர்த்தனர். (ஐ)*



## *கழக உலகக் கிண்ண உதைபந்து:*
# அமெரிக்காவில் நடத்த முடிவு; 32 கழக அணிகள் பங்கேற்கும்!

*நியூயோர்க், ஜூன் 27*

*கழகங்களுக்கு இடையிலான பிபா உதைபந்தாட்ட உலகக் கிண்ணப் போட்டி 2025இல் அமெரிக்காவில் நடைபெறவுள்ளது.*

*கழகங்களுக்கு இடையிலான உலகக்கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி கடந்த 2000ஆம் ஆண்டு முதல் நடக்கிறது. 7 கழகங்கள் பங்கேற்ற இந்தப் போட்டியில் 2025முதல் 32 அணிகள் பங்கேற்கவுள்ளன.*

*பிபாவின் நிறைவேற்றுக் குழு கழக உலகக் கிண்ணத் தொடரை நடத்தும் நாடாக அமெரிக்க்காவை தெரிவு செய்துள்ளன. இதனால், தொடர்ச்சியாக 3 வருடங்கள் உலகின் 3 பெரிய உதைபந்தட்ட சுற்றுப்போட்டிகள் ஐக்கிய அமெரிக்காவில் நடைபெறவுள்ளன.*

*2024 ஆம் ஆண்டில் கோபா அமெரிக்கா கிண்ணம், 2025இல் கழக உலகக் கிண்ணம், 2626இல் உலககக் கிண்ணத் தொடரை கனடா, மெக்சிக்கோவுடன் இணைந்து அமெரிக்கா நடத்தவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)*

# ஒருநாள் உலகக்கிண்ண தொடர் விளையாடுவாரா வில்லியம்சன்?

*வெலிங்டன், ஜூன் 27*

*கேன் வில்லியம்சன் ஐ. பி. எல். போட்டியின்போது காயமடைந்தார். இதனால் தொடரிலிருந்து வெளியேறினார். இந்நிலையில், அவர் ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரிலும் விளையாட முடியாது என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.*

*சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட வில்லியம்சன் தற்போது உடற்பயிற்சிகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளார்.*

*இது தொடர்பில் அவர் கூறுகையில், எனது உடல நிலையில் நல்ல முன்னேற்றம் உள்ளது. மிகவும் சிறிய சிறிய அடியாக எடுத்து வைக்கிறேன். ஒவ்வொரு வாரம் ஒரு புதிய புதிய முன்னேற்றம் நிகழ்கிறது.*

*ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரில் விளையாடுவேனா தெரியவில்லை. அதைப் பற்றி அதிகம் சிந்திக்கவில்லை. அணியில் நிலைப்பாடு என்னவென்றும் தெரியவில்லை. என்ன தொடர் வருகிறது என்பதை நான் பொருட்படுத்தவில்லை. உடல்நிலை முன்னேற்றத்தில் மட்டுமே கவனம் செலுத்தி வருகிறேன். எல்லா விளையாட்டு வீரர்களும் விரைவில் குணமடையவே விரும்புவர். ஆனால், அதற்காக என்னை தயார்படுத்துவதில் எந்த குறையையும் வைக்க விரும்பவில்லை - என்றார்.*



# யூனுஸின் சாதனையை சமன்செய்தார் ஹசரங்க



*புலவாயோ, ஜூன் 27*

*தொடர்ச்சியாக 3 ஒருநாள் போட்டிகளில் 5 விக்கெட்களை கைப்பற்றிய வீரர் என்ற சாதனையை வக்கார் யூனுஸுடன் சமன் செய்துள்ளார் ஹசரங்க.*

*உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான தகுதி சுற்று சிம்பாப்வேயில் நடந்து வருகிறது.*

*நேற்று முன்தினம் நடந்த அயர்லாந்துக்கு எதிரான போட்டியில் இலங்கையின் சுழல்பந்து வீச்சாளர் ஹசரங்க 10 ஓவர்களில் 79 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 5 விக்கெட்களை கைப்பற்றினார்.*

*இதன் மூலம் பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் வக்கார் யூனிஸின் உலக சாதனையை ஹசரங்க சமன் செய்துள்ளார். ஹசரங்க முந்தைய இரு ஆட்டங்களில் முறையே ஐக்கிய அரபு அமீரகத்துக்கு எதிராக 6 விக்கெட்களும், ஓமனுக்கு எதிராக 5 விக்கெட்களும் வீழ்த்தியிருந்தார்.*

*சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் தொடர்ச்சியாக 3 போட்டிகளில் 5 விக்கெட்கள் வீழ்த்திய 2ஆவது பந்துவீச்சாளர் என்ற சிறப்பை அவர் பெற்றார்.*

# சிறுபோக நெல்லை நியாயமான விலையில் கொள்வனவு செய்ய நடவடிக்கை வேண்டும்

## அரசிடம் சந்திரகுமார் கோரிக்கை

கிளிநொச்சி, ஜுன் 27

**சிறுபோகத்தில் அறுவடை செய்யப்படும் நெல்லுக்கு அரசு நியாயமான விலையை தீர்மானித்து அதனை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு.சந்திரகுமார் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காலம் காலமாக தாம் அறுவடை செய்யும் நெல்லை நியாயமான விலையில் விற்பனை செய்ய முடியாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதனால் ஏராளமான விவசாயிகள் வாழ்நாள் கடன்காரர்களாக காணப்படுகின்றனர். இந்த நிலைமைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். நாட்டில் கொண்டுவரப்பட்ட இரசாயன உரங்கள் மீதான தடை காரணமாக விவசாயிகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டனர், உற்பத்திகள் குறைவடைந்து நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது.

இருப்பினும் அந்த தாக்கத்திற்குள் இருந்து முழுமையாக மீண்டு வரமுன் 2023 சிறுபோக நெல் அறுவடை ஆரம்பிக்கவுள்



ளது. ஆனால் சிறுபோகத்தில் அறுவடைச் செய்யப்படும் நெல்லுக்கு இதுவரை நியாயமான விலை நிர்ணயம் செய்யப்படவில்லை. சிறுபோக விதைப்பின் போது வாக்குறுதி அளிக்கப்பட்டது போன்று விவசாயிகளுக்கு மானிய அடிப்படையிலான உரங்கள் வழங்கப்படவில்லை. இதனால் கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் அதிகளவில் சிறுபோக நெற்பயிர்ச் செய்கையில் ஈடுப்பட்ட விவசாயிகள் நெருக்கடிகளை எதிர்கொண்டே பயிர்ச்செய்கையை மேற்கொண்டனர்.

இந்த நிலையில் அவர்களால் அறுவடை செய்யப்படும் நெல்லுக்கும் நியாயமான விலை நிர்ணயம் செய்யப்பட்டு அதனை கொள்வனவு செய்யவும் அரசு ஒரு பொறிமுறையை ஏற்படுத்த தவறின் விவசாயிகள் மேலும் பாதிக்கப்படுவார்கள். எனவே சிறுபோகத்தில் அறுவடை செய்யப்படும் நெல்லுக்கு நியாயமான விலையினை நிர்ணயிக்கவும் அதனை கொள்வனவு செய்யவும் அரசு விரைவான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# முக்கிய பொருட்களின் விலை குறைப்பு; சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் பேச்சு

கொழும்பு, ஜுன் 27

சிமெந்து, மாபிள்கள் மற்றும் பெயின்ட் விலை குறைப்பு தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் பொருட்களின் விலைகளை குறைக்கவேண்டும் எனவும் வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்த பொருட்களின் சந்தை விலையை குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும்



என அவர் கூறினார்.

அது மட்டும் அன்றி அதற்காக தொடர்ந்தும் பாடுபடுவேன் எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் நுகர்வோர் அதிகாரசபை செயற்பட்டு வருவதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# சபாநாயகர் தலைமையில் கட்சி தலைவர்கள் கூட்டம்

கொழும்பு, ஜுன் 27

பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இன்று முற்பகல் கூடவுள்ளது.

சபாநாயகர் அலுவலகத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் அரசியல் கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டுள்ளனர்.

பாராளுமன்றம் இவ்வாரம் அவசரமாக கூட்டப்படவுள்ள நிலையிலேயே, பாராளுமன்ற நடவடிக்கைகள் பற்றி ஆராய இந்தக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ)

# நிபந்தனைகளுக்கு அரசு இணங்காவிட்டால் உள்ளகக் கடன் சீரமைப்புக்கு ஆதரவில்லை!

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, ஜுன் 27

சில நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டால், ஜுலை 01 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவளிக்காது என அறிவித்துள்ளது.

"அரசாங்கம் கடனை குறைக்கும் நடவடிக்கைக்கு சென்றால் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டத்தை நாங்கள் ஆதரிக்க மாட்டோம். வைப்பு செய்தவர்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறோம். ஊழியர் சேம இலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி மீது அரசாங்கம் கை வைக்கக் கூடாது என்று ஏற்கனவே கூறியுள்ளோம். நாங்கள் வரைந்த கோட்டுக்கு அரசாங்கம் உடன்பட்டால் மாத்திரமே நாங்கள் வேலைத்திட்டத்திற்கு ஆதரவளிப்போம்" என கலாநிதி ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.

அதேநேரம், உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை ஜுன் 28 ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பித்து, ஜுன் 29 ஆம் திகதி பொது நிதிக் குழுவுக்குப் பரிந்துரைத்து, சனிக்கிழமையன்று பாராளுமன்றத்தில் ஒப்புதல் பெறுவதற்கான திட்டங்களை எதிர்க்கட்சிகள் கேட்டிருப்பதாக அவர் கூறினார்.

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்னுடனும் எதிர்க்கட்சித் தலைவருடனும் இந்த விடயம் தொடர்பில் தொலைபேசியில் உரையாடினார்" என்று அவர் கூறியபோதிலும், தொலைபேசி உரையாடலின் விவரங்களை வெளிப்படுத்தவில்லை.

# ஜனாதிபதி ரணிலுக்கு பூரணமான ஒத்துழைப்பு

## குமார வெல்கம தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 27

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்களாணை இல்லையென்றால் மக்களாணை உள்ள, சிறந்த ஒருவரை அரசியல் தரப்பினர் முன்வைத்தால் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். கிடைத்த வாய்ப்பை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பயன்படுத்திக் கொள்ளவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ராஜபக்ஷர்களின் தவறான பொருளாதார முகாமைத்துவத்தால் நாடு பொருளாதார பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கடுமையான தீர்மானங்களால் நாடு சற்று இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது என்பதை அரசியல் நோக்கத்துக்கு அப்பாற்பட்ட வகையில் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாடு என்ற ரீதியில் வங்குரோத்து அடைந்துள்ள நிலையில் அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்பட முடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்களாணை இல்லை என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. மக்களின் கடும் எதிர்ப்பை தொடர்ந்து கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதன் பின்னர் பாராளுமன்றத்தின் ஊடாக இடைக்கால ஜனாதிபதி தெரிவு இடம் பெற்றது.

ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட அனுரகுமார திஸாநாயக்க, டலஸ் அழகபெரும ஆகியோர் வெற்றிப்பெறவில்லை. 134 மக்களாணையுடன் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்களாணை கிடையாது என எதிர்க்கட்சிகள் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஜனாதிபதிக்கு மக்களாணை இல்லை என்றால் மக்களாணை உள்ள, சிறந்த ஒருவரை அரசியல் தரப்பினர் முன்வைத்தால் அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். நெருக்கடியான சூழலில் கிடைத்த வாய்ப்பை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பயன்படுத்திக் கொள்ளவில்லை-என்றார். (அ)

# வல்லையில் மீட்கப்பட்ட சடலம் அச்சுவேலி இளைஞருடையது!

## இறப்புக்கு போதைப்பொருள் காரணமாக இருக்கலாம்

யாழ்ப்பாணம், ஜுன் 27

வடமராட்சி வல்லை பகுதியில் வெற்றுக்காணியில் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்ட சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அச்சுவேலியை சேர்ந்த போதைக்கு அடிமையான இளைஞனே உயிரிழந்தவராவார். அவர் போதைப்பொருளை உட்கொண்டபோது அல்லது ஊசி மூலம் செலுத்தியபோது உயிரிழந்திருக்கலாம் என கருதப்படுகிறது.

அச்சுவேலியை சேர்ந்த ஐயாத்துரை பிரசன்னா (வயது-21) என்ற இளைஞனே உயிரிழந்தவர்.

கடந்த 22ஆம் திகதி வல்லை - தொண்டைமானாறு வீதியில் வெற்றுக்காணியொன்றில் உருக்குலைந்த நிலையில் சடலம் மீட்கப்பட்டிருந்தது.

அச்சுவேலி பகுதியைச் சேர்ந்த 21 வயது இளைஞன் கடந்த 16ஆம் திகதி முதல் காணாமல்போயிருந்த நிலையில், இளைஞனின் குடும்பத்தினர் சடலத்தை அடையாளம் காட்டியுள்ளனர்.

இதன்படி, சடலம் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த இளைஞன் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என்றும், இந்த விவகாரத்தில் கைதாகி மிக அண்மையிலேயே விடுதலையானவர் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

போதைப்பொருளை ஊசி மூலமோ அல்லது வாய்மூலமோ உட்கொண்டதில் அவரது மரணம் நிகழ்ந்திருக்கலாமென தெரிய வந்துள்ளது. போதைப் பொருளை ஊசிமூலம் செலுத்துபவர்கள் தேசிக்காய் பயன்படுத்தும் நிலையில், சடலத்துக்கு அருகில் பயன்படுத்தப்பட்ட தேசிக்காய் துண்டுகளும் மீட்கப்பட்டிருந்தன. (அ)

# நாடு திரும்பினார் ஜனாதிபதி!



கொழும்பு, ஜுன் 27

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐரோப்பிய சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்றுக் காலை நாடு திரும்பினார்.

எமிரேட்ஸ் எயார்லைன்ஸ் விமானமான ஈ.கே.650 இல் டுபாயில் இருந்து நேற்றுக் காலை 09.10 மணியளவில் ஜனாதிபதி கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் நாடுகளுக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த 17ஆம் திகதி ஜனாதிபதி நாட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அரசின்...

பேசியுள்ளார் என்று தெற்கு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எல்லோரும் பிரச்னைகள் பற்றியே பேசுகின்றார்கள். அந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றியோ - தீர்க்கப்பட்ட பிரச்னைகள் பற்றியோ பேசுவதில்லை.

இன்னும் சில மாதங்களில் தேர்தல் ஒன்றுக்குச் செல்ல வேண்டியுள்ளது. மக்களிடம் உண்மையைக் கூறாமல் இருந்தால் எப்படி தேர்தலை எதிர்கொள்வது? என்றும் ஜனாதிபதி கவலைப்படுகிறார் என்றும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. (ஐ)

## ராஜபக்ஷக்களை...

இராணுவத் தளபதி என்ற ரீதியிலும் இதை வெளிப்படையாகக் கூற எனக்கு முழு உரித்துண்டு.

எனவே, ‘போர் வெற்றி நாயகர்கள்’ என்ற மகுடத்தை சூடிக்கொள்ள ராஜபக்ஷக்களுக்கு எந்த அருகதையும் கிடையாது. போர் வெற்றியின் பின்னர், ஆட்சியில் இருந்த ராஜபக்ஷக்கள் தங்கள் சுகபோக அரசியலுக்காக இந்த நாட்டின் வளங்களை விற்று - பொது சொத்துக்களைக் கொள்ளையடித்து இறுதியில் நாட்டையே அழித்தனர்.

அவர்கள் செய்த இந்த மோசமான செயல்களை அடுத்தே அவர்கள் கூண்டோடு அதிகாரத்திலிருந்து மக்களால் துரத்தியடிக்கப்பட்டார்கள். அதுமட்டும் போதாது, ராஜபக்ஷக்களைக் கூண்டோடு மக்கள் முன்னிலையில் தூக்கிலிட வேண்டும்.

பெரும் குற்றவாளிகளான ராஜபக்ஷக்களைப் பாதுகாக்கவே தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல்களை நடத்த அஞ்சுகின்றார். தேசிய ரீதியில் தேர்தல் ஒன்று நடந்தால் ஐக்கிய மக்கள் சக்தியே ஆட்சிக்கு வரும். அது ராஜபக்ஷக்களுக்கும் தனக்கும் பாதகமாக அமையும் என்று ரணில் எண்ணுகின்றார்.” - என்றார். (ஐ)

## சி.ஐ.ஏயின்...

பேரவையின் தெற்காசிய பிராந்தியத்துக்கான செயல் இயக்குநரை சந்தித்துப் பேசினோம். இதன்போது, இந்த ஆண்டு ஜனவரியில் தானும், தேசிய பாதுகாப்பு பேரவையின் அங்கத்தவர்களும் சி. ஐ. ஏயின் இயக்குநரும் இலங்கை வந்தனர் என்று அவர் எமக்குக் கூறினார்.

இலங்கையில், அரசியல், பொருளாதார நிலைகுலைவால் ஏற்பட்ட கஷ்டங்களை நேரில் கண்டதாகவும் அவர் கூறினார். எனினும், இந்தக் கஷ்டங்களிலும் வாய்ப்புகள் காணப்பட்டன. அந்த வாய்ப்புகளை இனங்கண்டு, அமெரிக்க அணுகுமுறையுடன் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்பதையும் அவதானித்ததாகவும் அவர் கூறினார் என்றும் தெரிவித்தார்.

இதன்போது, கடந்த 14 வருடங்களில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையை பொறுப்புக்கூற செய்ய முடியவில்லை. செப்ரெம்பர் மாதத்துடன் இலங்கை பொறுப்புக்கூறலில் இருந்து தப்பிக்க வாய்ப்புள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டது.

பொறுப்புக்கூறலில் இருந்து இலங்கை அவ்வாறு தப்பிக்க முடியாது என்றும், எந்த நாடு ஆதரிக்காது விட்டாலும் எதிர்வரும் செப்ரெம்பர் 24ஆம் திகதி அளவில் அமெரிக்கா பிரேரணை மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரும் என்றும் தேசிய பாது காப்பு அதிகாரி உறுதியளித்ததாக சுரேன் கூறினார்.

முன்னதாக அமெரிக்காவின் சி. ஐ. ஏ. இயக்குநர் உட்பட 22 பாதுகாப்பு அதிகாரிகள் கடந்த பெப்ரவரி 14ஆம் திகதி இலங்கை வந்தனர் என்றும் அவர்களுக்கு அதியுயர் பாதுகாப்பு அளிக்கப்பட்டதாகவும் தென்னிலங்கையில் தகவல்கள் பரவின. இதனை அரசாங்கம் மறுத்து வந்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கட்சித் தலைவர்களின் கூட்டம் இன்று

கொழும்பு, ஜுன் 27

பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் கூடவுள்ளது.

சபாநாயகர் அலுவலகத்தில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் அரசியல் கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டுள்ளனர்.

பாராளுமன்றம் இந்த வாரம் சனிக்கிழமை அவசரமாகக் கூட்டப்படவுள்ள நிலையிலேயே பாராளுமன்ற நடவடிக்கைகள் பற்றி ஆராய இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## நலன்புரி...

முன்பாக நடந்த போராட்டத்தின்போது வவுனியா - மன்னார் வீதியை மறித்து சுமார் அரை மணிநேரம் போராட்டம் நடைபெற்றது. சுமார் இரண்டு மணிநேரம் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

இதேபோன்று, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலகம் முன்பாக போராடியவர்கள் ஏ-9 வீதியில் அமைந்துள்ள பண்டாரவன்னியன் சதுக்கம் முன்பாக ஒன்றுகூடி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது ஏ-9 வீதி ஊடான போக்குவரத்து சுமார் இரண்டரை மணிநேரம் தடைப்பட்டது.

இதேநேரம், யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களிலும் நேற்றைய தினம் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. (ஐ)

(தொடர்புடைய செய்திகள் உள்ளே)

## உண்மை...

உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் இலங்கை மக்கள் மற்றும் தலைவர்களுடன் அரசாங்கம் தொடர்ச்சியான தொடர்புகளை மேற்கொண்டு வருகிறது.

பிரதமர் மோடி தலைமையிலான இந்திய அரசாங்கத்திடமிருந்து எங்களுக்குக் கிடைத்த ஆதரவுடன் நாங்கள் எங்கள் பெரும்பாலான பிரச்னைகளைத் தீர்த்தோம்.

இலங்கையில் இயல்புநிலையை மீண்டும் கொண்டு வருவோம் என்று நாங்கள் நம்புகிறோம். 2022 இல் இலங்கை முன்னெப்போதும் இல்லாத நிதி நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளது.

இது நாட்டில் அரசியல் கொந்தளிப்பைத் ஏற்படுத்தியுள்ளது. இது ராஜபக்ஷ குடும்பத்தை வெளியேற்ற வழிவகுத்தது. இந்த நெருக்கடியானது ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை உருவாக்குவதற்கும் வழிவகுத்தது.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் பொருளாதாரத்தின் நிதி ஆரோக்கியத்தை மீட்டெடுப்பதற்கும் அரசாங்கம் போராடி வருகிறது.

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ பல முயற்சிகளை எடுத்தோம். 2016ஆம் ஆண்டு சகல செயல்பாடுகளையும் ஆரம்பித்து, காணாமல் போனவர்களுக்கான பணிமனைகள், சமாதானத்தை ஏற்படுத்துதல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த செயல்பட்டோம்.

இலங்கை அரசாங்கம் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவவுள்ளதுடன், அனைத்து சமூகங்களுடனும் ஒருமித்த கருத்துடன் நீண்டகால சமாதானத்தை உறுதிப்படுத்த முயற்சிக்கிறோம்.

பல பிரச்னைகளுக்கு தீர்வு கண்டுள்ளோம். பல வழக்குகள் இருந்தன. பல கைதிகள் இருந்தனர். இருப்பினும், இப்போது இந்த பிரச்சினைகள் அனைத்தும் மாறியுள்ளன. இலங்கை அனைத்துப் பிரச்னைகளையும் ஒவ்வொரு கோணத்தில் இருந்து தீர்த்து வருகிறது - என்றும் கூறினார். (ஐ)

# இலங்கைக்கு தொடர்ந்தும் உதவுவதாக சீனா உறுதி!

கொழும்பு, ஜுன் 27

இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாக சீன அரசாங்கம் மீண்டும் உறுதி அளித்துள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் வரை சீனாவின் டியான்ஜின் நகரில் நடைபெறவுள்ள, சர்வதேச பொருளாதார மாநாட்டில் பங்கேற்பதற்காக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உள்ளிட்ட குழுவினர் சீனா சென்றுள்ளனர்.

இதன்போது, வெளிவிவகார அமைச்சர் சீன வெளிவிவகார அமைச்சர் கின் ஹாங்கை சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பில், நாட்டின் தேசிய



சுதந்திரம் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு, சீன அரசாங்கம் மற்றும் சீன மக்கள் தன்னலமற்ற ஆதரவை வழங்குவதை பாராட்டுவதாகவும் கடன் பிரச்னை தொடர்பில் இலங்கைக்கு வழங்கிய ஆதரவை மிகவும் பாராட்டுவதாகவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# வடக்கு மாகாண சபையின் வாகனங்களையும் காணவில்லை!

கொழும்பு, ஜுன் 27

இலங்கை ஜனாதிபதி பணிமனைக்கென வடக்கிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட சொகுசு வாகனங்கள் தொடர்பில் சர்ச்சைகள் எழுந்துள்ளன.

வடக்கின் ஆளுநர்களாக இருந்தவர்கள் வடக்கு மாகாண சபைக்கு சொந்தமான பல கோடி ரூபாய் பெறுமதியான வாகனங்களை கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் விடுவித்திருந்தனர்.

இலங்கை தேசிய கணக்காய்வு பணிமனையின் சமீபத்திய அறிக்கையின்படி, ஜனாதிபதி செயலகத்துக்கு சொந்தமான 51 வாகனங்கள் தொடர்பில் எவ்வித தகவலும் கண்டறியப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றில் வடக்கு மாகாண சபைக்கு சொந்தமான வாகங்களும் அடக்கம் என்று கூறப்படுகின்றது.

வாகனங்களின் இருப்பிடத்தைக் கண்டறிய முடியாததால் அவற்றின் பெறுமதியை கண்டறிய முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி பணிமனைக்கு சொந்தமான 53 வாகனங்கள் முறையான முறைக்கு புறம்பாக ஏனைய அரச நிறுவனங்கள், கோவில்கள், மதத் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளன என்று தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

அறிக்கையின்படி, 2022 ஆம் ஆண்டில் 27 வாகனங்களுக்கு மட்டுமே பராமரிப்பு செலவாக 13 மில்லியன் ரூபாயை ஜனாதிபதி பணிமனை செலவிட்டுள்ளது.

இது தொடர்பில் தேசிய கணக்காய்வு அலுவலகம் ஜனாதிபதி செயலகத்திடம் பல தடவைகள் வினவிய போதும் முறையான பதில் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## அரச...

பிவிதுரு ஹெல உறுமய கட்சி பணிமனையில் அவர் நேற்று நடத்திய சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

தேசிய கடன் மறுசீரமைப்பு மேற்கொள்வதில்லை என்றே அரசாங்கம் ஆரம்பத்தில் தெரிவித்து வந்தது. ஆனால், பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் அழுத்தம் காரணமாகவே அரசாங்கம் தனது நிலைப்பாட்டை தற்போது மாற்றிக்கொண்டுள்ளது.

ஏனெனில், கடன் மறுசீரமைப்பு தொடர்பில் தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தில் எங்கும் தெரிவிக்கப்படவில்லை.

மாறாக பொருளாதாரத்தை ஸ்திரமான நிலையில் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவே அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. அதனால் இதற்கு மாற்று வழி எடுத்த கடனை நீக்கிக் கொள்வதல்ல. அத்துடன் அரசாங்கம் அவ்வாறு தேசிய கடன் மறுசீரமைப்பு மேற்கொள்வதாக இருந்தால் வங்கிகளுடன் கடன் உரிமையாளர்களுடன் கலந்துரையாடி எடுத்த கடனை செலுத்தும் கால எல்லையை நீடித்துக்கொள்ள முடியும். அல்லது வட்டி வீதத்தை குறைத்துக்கொள்ள முடியும்.

இவ்வாறான மாற்றுவழிகளை பயன்படுத்தாமல் கடன் உரிமையாளர்களுடன் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக்கொள்ளாமல் கடன் மறுசீரமைப்பை அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக தீர்மானித்து பலாத்காரமாக வங்கி மற்றும் ஓய்வூதிய நிதியங்கள்மீது சுமத்த முயற்சிப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை நாங்கள் எதிர்க்கிறோம் - என்றார். (ஐ)

## பாதுகாப்பு...

குறித்து கேள்வி எழுப்பிய ஊடகவியலாளர் பாதுகாப்பு உடன்படிக்கை குறித்தும் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சீனா அவ்வாறான உடன்படிக்கை ஒன்றை செய்துகொள்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடும் என தான் கருதவில்லை என்றும் கூறினார். (ஐ)

## காணிகளை...

வன்னியாராச்சி சமர்ப்பித்த திட்ட வரைவுக்கே நேற்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இதனடிப்படையில், வனவளப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் அமைச்சின் செயலாளர் தலைமையில் குழு அமைக்கப்பட்டு, 1985ஆம் ஆண்டு வரையில், குறித்த இரண்டு திணைக்களங்களாலும் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த காணிகளை வரையறை செய்யும் செயல்பாடுகள் இந்த வருட இறுதிக்குள் நிறைவடைய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. அத்துடன், எஞ்சிய காணிகள் அனைத்தையும் விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கு மற்றும் அண்டிய பிரதேசங்களில் போர் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்த நிலையில், காடுகளாக மாறிய பிரதேசங்களையும் போரின் பின்னர் இரண்டு திணைக்களங்களும் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக அடையாளப்படுத்தியதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியிருந்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

## மதவாச்சியில் யானை தாக்கி இளைஞர் ஒருவர் பரிதாப பலி!

வவுனியா, ஜூன் 27

காட்டு யானை தாக்கி இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மதவாச்சியில் நேற்று அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் வயலுக்குச் சென்றபோதே யானையின் தாக்குதலுக்கு இலக்காகிச் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

27 வயதுடைய இளைஞரே இதன்போது உயிரிழந்தார்.

சம்பவ இடத்திலிருந்து சடலத்தை மீட்ட பொலிஸார், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். (அ)

## அமைச்சரவையில் மாற்றமா?

கொழும்பு, ஜூன் 27

விரைவில் அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறவுள்ளது எனவும், 6 புதிய அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும் வெளியாகியுள்ள தகவல்களில் எவ்வித உண்மையில்லை என ஜனாதிபதி அலுவலகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் பல்வேறு ஊடகங்களில் வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசத்திடம் வினவிய போது, விரைவில் புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என தமக்கு தெரியவில்லை என அவர் குறிப்பிட்டார்.

அமைச்சரவைக்கு நியமிக்கப்படவேண்டிய கட்சியின் சிரேஷ்டர்களின் பட்டியலை இதற்கு முன்னர் ஜனாதிபதியிடம் தமது கட்சி சமர்ப்பித்ததாகவும், ஆனால் அதன் பின்னர் நியமனங்கள் தொடர்பில் தமக்கு தகவல் தெரிவிக்கப்படவில்லை எனவும் அவர் கூறினார். (அ)

## உணவு தொண்டையில் சிக்கி ஒரு வயது குழந்தை மரணம்!

கொழும்பு, ஜூன் 27

பொகவந்தலாவை பகுதியில் தாய் ஒருவர் தனது ஒரு வயது மகளுக்கு உணவு ஊட்டிக்கொண்டிருந்தபோது உணவு தொண்டையில் சிக்கி அந்தக் குழந்தை உயிரிழந்துள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவை பிரிட்வெலி தோட்டத்தைச் சேர்ந்த ஆறுமுகன் அகல்யா (வயது-1) என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

உணவு ஊட்டிக் கொண்டிருந்தபோது அது தொண்டையில் சிக்கி மூச்சுத்திணறல் ஏற்பட்டதால் குழந்தை பொகவந்தலாவை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. ஆயினும் அது உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டது. (அ)

## லிட்ரோ எரிவாயு விலை குறைகிறது

கொழும்பு, ஜூன் 27

எரிவாயு சிலிண்டரின் விலையை மீண்டும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, அடுத்த மாதம் முதல் வாரத்தில் விலைகள் குறைக்கப்படும் என லிட்ரோ நிறுவன தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

இம்மாதம் 04ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில், 12.5 கிலோ எடை கொண்ட எரிவாயு சிலிண்டரின் விலை 452 ரூபாயால் குறைக்கப்பட்டு அதன்படி புதிய விலை 3,186 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டது.

இது தவிர 05 கிலோ எரிவாயுவின் விலை 181 ரூபாயால் குறைக்கப்பட்டு 1281 ரூபாயாகவும் 2.3 கிலோ எடை கொண்ட சிலிண்டரின் விலை 83 ரூபாயால் குறைக்கப்பட்டு 598 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டது.

அதன்படி, அடுத்த மாதம் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டால், பொருளாதார நெருக்கடியின் பின்னர் தொடர்ந்து நான்காவது முறையாக எரிவாயு விலை குறைக்கப்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

# சட்டவிரோத காணி அபகரிப்பை தடுத்து நிறுத்த கோரி போராட்டம்

## பொன்நகர் பகுதி மக்கள் நடத்தினர்

**கிளிநொச்சி, ஜூன் 27**
**சட்டவிரோத காணி அபகரிப்பைத் தடுத்து நிறுத்தக் கோரி பொன்நகர் மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.**

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பொன்நகர் பகுதியில் அமைந்துள்ள காணிகளை அரச அதிகாரிகள் தன்னிச்சையாக முடிவெடுத்து தமக்கு விரும்பியவர்களுக்கு வழங்கி வருவதாக குற்றஞ்சாட்டி அப்பகுதியில் வாழும் மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் கிளிநொச்சி டிப்போ சந்தியில் ஆரம்பித்து கரைச்சி பிரதேச செயலாளர் அலுவலகம் மற்றும் மாவட்ட செயலகம் முன்பாக சென்று நிறைவடைந்தது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனின் கவனத்துக்காக மகஜர் ஒன்றும் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சிறிமோகனனிடம் கையளிக்கப்பட்டது. (அ)





# மாகாண தேர்தல் குறித்து கொழும்பிடம் உறுதிமொழியை எதிர்பார்க்கும் டில்லி!

கொழும்பு, ஜூன் 27

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் டில்லி செல்வதற்கு முன்னரே, மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்ற வாக்குறுதியை கொழும்பிடமிருந்து டில்லி எதிர்பார்க்கின்றது என இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

இந்தியத் தரப்பால் பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இது தொடர்பில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

இதையடுத்தே பஸில் ராஜபக்ஷ மொட்டுவின் மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களை பத்திரமுல்லை காரியாலயத்துக்கு அழைத்து இது தொடர்பில் பேசியுள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு ரணிலுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவுள்ளது. அது தொடர்பான நிபந்தனைக்கு அவர் இந்தியா செல்லும் முன்பே உடன் பட வேண்டி வரும். இந்தியா இதையே எதிர்பார்க்கின்றது என்று பஸில் கூறியுள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்குப் பணம் இல்லை என்று கூறி வரும் ரணில் அரசு, இதே காரணத்தை இந்தியாவிடம் கூறி மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது. (அ)

## 60 வகையான மருந்துகளின் விலை நேற்று முதல் குறைப்பு

கொழும்பு, ஜூன் 27

60 வகையான மருந்துகளின் விலை நேற்று முதல் 16 வீதம் குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், 500 மில்லிகிராம் பரசிட்டமோல் மாத்திரை ஒன்றின் விலை 3 ரூபா 49 சதங்களாக குறைக்கப்பட்டுள்ளது.

இன்சுலின் 10 மில்லிகிராம் குப்பியின் அதிகபட்ச சில்லறை விலை 2 ஆயிரத்து 270 ரூபா 2 சதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், 375 மில்லிகிராம் அமொக்ஸிலின் கிளாவுலினிக் அமிலத்தின் அதிகபட்ச சில்லறை விலை 70 ரூபா 32 சதங்களாக குறைக்கப்பட்டுள்ளது.

டொலரின் பெறுமதி வீழ்ச்சி காரணமாக இறக்குமதி செய்யப்படும் மருந்துகளின் விலை குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இரத்மலானையில் விபத்து; தமிழ் வர்த்தகர் உயிரிழப்பு

### அவரது மனைவி படுகாயம்

கொழும்பு, ஜூன் 27

கொழும்பில் இடம்பெற்ற வாகன விபத்தில் தமிழ் வர்த்தகர் ஒருவர் உயிரிழந்தார். அவரின் மனைவி படுகாயமடைந்தார்.

கொழும்பு, இரத்மலானை பிரதேசத்தில் நேற்றுக் காலை 8 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தனது வர்த்தக நிலையத்துக்கு மனைவியை மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு குறித்த வர்த்தகர் பயணித்துள்ளார்.

இதன்போது எதிரே வந்த ஹைஏஸ் வாகனம் மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் குறித்த வர்த்தகர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவரின் மனைவி படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

திருகோணமலையைச் சேர்ந்தவரும் இரத்மலானையில் வசிப்பவருமான பாரதிராஜா முகுந்தன் (வயது 44) என்ற வர்த்தகரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

ஹைஏஸ் வாகனத்தின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## போதைப் பொருளுடன் குருநகர் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணம் புறநகரப் பகுதியான குருநகரில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞன் விசேட அதிரடி படையினரால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடி படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், குருநகர் ஐந்து மாடி வீட்டு தொகுதிக்கு அருகில் குறித்த இளைஞனை கைது செய்து சோதனையிட்ட போது 7 கிராம் 5 மில்லிகிராம் ஹெரோயின் போதை பொருளை மீட்டனர்.

மேலதிக விசாரணைகளுக்காக யாழ்ப்பாண பொலிஸாரிடம் கைதான இளைஞனையும் மீட்கப்பட்ட போதைப்பொருளையும் பொலிஸ் விசேட அதிரடி படையினர் ஒப்படைத்துள்ளனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.